மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

மாலை—11



உரையாசிரியர்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

(சங்கரனடிமை)

உ

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

மாலை—11

உரையாசிரியர் :

சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம், சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

(சங்கரன் அடிமை)



வெளியீடு : 5—7—1982

பிரசுரம் :

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,

மேலமாம்பலம், சென்னை-600 033.

1982

[விலை ரூ. 3-00

உ

சைவ சமயாசாரியார்

நால்வர் துதி



திருஞான சம்பந்தர்   திருநாவுக் கரசர்   சுந்தர மூர்த்திகள்   மாணிக்க வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர்திருத் தாள்போற்றி

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

திருஞானசம்பந்தர்



காழியர் தவம், கவுணியர் தனம்,
கலைஞானத்து ஆழிய கடல்,
அதனிடை அமுது, வானோர் தனிநாதன்
திருவருள்பெற்ற
திருஞானசம்பந்தர்

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்



ஸமர்ப்பணம்

ஓம் சூலபாணயே நம:

சிவபெருமானுடைய 108 திருநாமங்களுள் பதினொன்றாவது திருநாமம் சூலபாணி என்பதாம். சூலபாணி என்ற சொல்லுக்கு த்ரிகுணாத்மகமான சூலத்தைக் கையில் கொண்டவர் என்றும், பிராணிகளின் ஜீவனையபகரிக்கும் இயமனையுங்கூடப் பக்தர்களுக்காகத் தனது சூலத்தால் நிக்ரஹம் செய்கிறவர் என்றும் பெரியோர்களால் பொருள் கூறப்படுகிறது. "மருள்பொழி மும்மலம் சிதைக்கும் வடிச் சூலம்......" என்று சேக்கிழார் பெருமான் அருளிச்செய்து உள்ளார். (சிறுதொண்ட நாயனார் புராணம் 35-ம் திருப் பாடல்). ஓம் சூலபாணயே நம: எனனும் இந்த பதினொன்றாவது திருநாம மந்திரத்தால் அருச்சித்து இந்த பதினொன்றாவது ஞானத்தமிழ் மாலையினை சிவபெருமானுக்கு அணிவிக்கும் நற்பேறு முந்தைய பல பிறவிகளில் செய்த புண்ணியத்தாலும் பெற்றோர்களது புண்ணியத்தாலும் பெறுகின்றேன்.

இங்ஙனம்
ஆங்கீரஸ வேங்கடேச சர்மா
உரையாசிரியர்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

உரையாசிரியர் பணிவுரை

திருச்சிற்றம்பலம்

நகரம் கெடப்பண்டு திண்தேர் மிசைநின்று நான்மறைகள்
பகர்அம் கழலவ னைப்பதி னாருயிரம் பதிகம்
மகரம் கிளர்கடல் வையம் துயர்கெட வாய்மொழிந்த
நிகரங் கிலிகலிக் காழிப் பிரானென்பர் நீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி : 15
(11-ம் திருமுறை)

திரிபுரம் எரித்தவரும், நான்மறைகளைப் பாடினவருமான சிவபிரானை உலகத்தவர் துயர்கெடும்படி பதினாருயிரம் பதிகங்களால் துதித்த ஒப்பற்றவர் திருஞானசம்பந்த மூர்த்திகள் என்று நம்பியாண்டார் நம்பிகளால் துதிக்கப்பட்ட திருஞானசம்பந்த மூர்த்திகளுடைய திருப்பதிகங்களை தலயாத்திரை முறையில் கும்பிட்டு வருகின்ற நாம் சென்ற இதழில் வரலாறும், பாடிய காலமும் தெரியாத சீகாழிப் பதிகங்களைக் கும்பிட்டு விட்டு மேற்கொண்டு தலயாத்திரையைத் தொடங்கலாம் என்ற உறுதியுடன் சீகாழியின் பன்னிரு திருப்பெயர்களில் ஒன்ருன பூந்தராய் என்ற பெயரில் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களை உரையுடன் வெளியிட்டோம் தொடர்ந்து இந்தப் பதினொன்ருவது தமிழ்மாலையில் சீகாழியின் மற்ருெரு பெயரான புகலி என்ற பெயரில் அருளிச் செய்யப்பட்ட பதிகங்களை வெளியிடுகின்ருேம்.

பத்தாவது தமிழ் மாலைக்கும் பதினொன்றாவது தமிழ் மாலைக்கும் இடையே சுமார் ஓராண்டுக் காலமாகி விட்டது. பணி பெரியது. ஆர்வம் ஒன்றையே மூலதனமாகக் கொண்டது. இடையில் ஏற்பட்ட இக்கால தாமதத்திற்காகப் பெரிதும் வருந்துவதுடன். இனி இம்மாதிரி ஒரு நாளும் நேராது, தொடர்ந்து மாலைகள் வெளிவரும் என்று மதிப்புக்குரிய சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

சென்னை-33
15-6-1982

சங்கரனடிமை

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
பதிப்பாசிரியர் - உரையாசிரியர்

சிவம்

திருச்சிற்றம்பலம்

வாக்கின் தனிமன்னர் ஏக மாறுத் திருவுளத் தோடும்
பூக்கமழ் பண்ணைகள் சூழ்ந்த புகலியின் மீண்டும் புகுந்து
தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி வீற்றிருந்தாரைத்
தூக்கின் தமிழ்மாலை பாடித் தொழுதங் குறைகின்ற நாளில்.

செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்றும்
வந்தசொற் சீர்மாலை மாற்றும் வழிமொழி எல்லா மடக்குச்
சந்த வியமகம் ஏகபாதம் தமிழ்இருக் குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு.

நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகுமி ராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கிய மாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினர் ஞானசம் பந்தர்.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் புராணம் 275—277

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவ ஜயம்



மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை—11

திருஞானசம்பந்தர் அருளியவை

(தொடர்ச்சி)

திருப்புகலி-1

(சீகாழி)

பண் : தக்கராகம்]   திருச்சிற்றம்பலம்   [1-ம் திருமுறை

விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே.

பதிகப் பொழிப்புரை : 1. ஆயுள் பதினாறு ஆண்டுகளே என்ற விதியாய், அவ்விதியின் விளைவாய் அதாவது மரணமாய், அவ்விளைவின் பயனாகி உயிரைக் கவர்ந்து செல்லச்

சினத்துடன் வருகின்ற இயமனை உதைத்தவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலமாவது, தாமரை மலர்கள் மலர்தலையுடையதும், தேன் பொதிகள் நிறைந்த பொழில்களையுடையதுமான திருப்புகலி என்ற நகராகும். இறைவரது பதியைக் கூறுமாற்றால் அவரது பெருமைகளைக் கூறியதாம்.

கொதியாவரு கூற்றை உதைத்தவர் பதி புகலி நகர் என்பது இப்பாடலிற் போந்த பொருளாகும். இறைவனார் மார்க்கண்டேயர்க்காகக் கூற்றுவனை உதைத்தமை கந்த புராணம் அசுரகாண்டம் மார்க்கண்டேயப்படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

விதியாய் — மார்க்கண்டர்க்கு வயது பதினாறு ஆண்டுகளே என்ற விதியாகி; விதி — இறைவனின் நியதி. **கொதியா** — கொதித்து அதாவது கோபித்து.

மார்க்கண்டர்க்கு வயது பதினாறே என்பது நியதியாயினும் அந்நியதிக்கும் காரணம் சிவபெருமானே என்பதை இயமன் உணர்ந்து கொள்ள வேண்டியே அவனை உதைத்தருளினார் என்று கொள்க. மார்க்கண்டேயர் சிவபிரானைச் சரணடைந்திருந்தது கண்டும் பொருட்படுத்தாது அவர் உயிரைப் பறிக்க முயன்றது இயமனின் குற்றம் என்க. இயமனை உதைத்தமையால் இறைவருக்கு காலஸம்ஹார மூர்த்தி, காலகாலன், ம்ருத்யுஞ்சயன் போன்ற திருநாமங்கள் ஏற்பட்டன.

பங்கயங்கள் அலர என்றதால் நீர் வளமும், பொழில் சூழ் என்றதால் சோலைகள் நிறைந்த இயற்கை எழில் வளமும் குறித்தவாறு கண்டு கொள்க. மேலும் வருமிடங்களிலும் இவ்வாறே கொள்க.

ஒன்னார் புரமூன் றுமெரித் தவொருவன்
மின்னா ரிடையா ளொடுங்கூ டியவேடந்

தன்னா லுறைவா வதுதண் கடல்சூழ்ந்த
பொன்னார் வயற்பூம் புகலிந் நகர்தானே. 2

2. பகைவர்களது மூன்று புரங்களையும் எரித்த ஒப்பற்ற வணங்கிய சிவபிரான் மின்னல் போன்ற ஒளி பொருந்திய இடையையுடைய உமாதேவியாரோடும் கூடிய திருக் கோலத்தோடு விரும்பியுறைகின்ற பதியாவது குளிர்ச்சி பொருந்திய கடல் சூழ்ந்ததும் பொன் போன்ற வயல்கள் நிறைந்ததுமான அழகிய புகலி நகராகும். திரிபுரம் எரித்த பிரான் உமையாளுடன் கூடிய கோலத்துடன் உறையும் பதியாவது புகலிநகர் என்பது இப்பாடலின் கருத்தாம்.

ஒன்னார் — பகைவர்; வேடந்தன்னால் — வேடத்தோடு என்ற பொருளைத் தந்தது. உறைவாவது—உறைவு + ஆவது, அதாவது உறையும் இடமாவது என்று பொருள் கொள்க.

தண்கடல் சூழ்ந்த புகலி, பொன்னார் வயல் புகலி, பூம் புகலி என்று கூட்டுக. பொன்னார் வயல் என்றது வயலில் நெற்கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தகுதியாயிருக்கும் காலத்தில் அவை பொன் போன்ற நிறத்துடன் இருக்கு மாதலால் அங்ஙனம் கூறியருளினார் எனக்கொள்க. அல்லது பொன் என்பதற்கு அழகு எனக்கொண்டு அழகு மிக்க வயல் கள் எனவும் கொள்ளலாம். பயிர்கள் இளமைப் பருவத்தில் பச்சைப் பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியும், அழகும் தருதலால் இப்பொருளும் கொள்ளத்தக்கதேயாம்.

வலியின் மதிசெஞ் சடைவைத் தமணாளன்
புலியின் னதள்கொண் டரையார்த் தபுனிதன்
மலியும் பதிமா மறையோர் நிறைந்தீண்டிப்
பொலியும் புனற்பூம் புகலிந் நகர்தானே. 3

3. (தக்ஷனின் சாபத்தால்) தேய்ந்து அதனால் வலி குறைந்த பிறைச்சந்திரனைத் தனது சிவந்த சடையில் வைத்து அதனால் அவனுக்கருள் செய்த மணாளனும்,

புலியின் தோலைக்கொண்டு உடையாக இடையில் தரித்த புனிதனுமாகிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருப்பதி யாவது சிறந்த மறையவர்கள் நிறைந்து நெருங்கி அதனால் சிறந்து விளங்கும் நீர்வளமும் அழகுமுடைய புகலி நகரா கும். மதிசூடிய மணாளன், புலித்தோலரையார்த்த புனிதன் பதி புகலி நகராம் என்பது இத்திருப்பாடலால் அறியும் பொருளாம்.

தக்ஷன் சாபத்தால் தேய்ந்து கடைசியில் ஒரே ஒரு கலை மிஞ்ச, அந்நிலையில் எவராலும் காக்கமுடியாது கைவிடப் பட்ட சந்திரனை, அவ்வொரு கலையினைத் தமது சடையில் தாங்கி அது வளரவும் தேயவும் அருள் செய்து காத்தருளிய வரலாறு இங்குக் குறிப்பிடப்பட்டது. இதனால் இறைவரது பெருங்கருணை—தளர்ந்தாரைத் தாங்கும் இயல்பு - கூறப் பட்டது.

புலியின்னதள்—புலித்தோல்.

மறையோர்—வேதங்களை ஓதுபவர்; ஈண்டுதல் நெருங்கி இருத்தல். மறையவர்கள் நிறைந்து நெருங்கியிருத்தலால் அவர்களது சிவ வேடத்தாலும் மறையொலியாலும் பொலியும் புகலிநகர் என்பதாம். பொலிதல்—சிறத்தல், விளங்கல், மிகுதல் முதலிய பொருள்களைத்தரும்.

கயலார் தடங்கண் ணியொடும் மெருதேறி
அயலார் கடையிற் பலிகொண் டவழகன்
இயலா லுறையும் மிடமெண் டிசையோர்க்கும்
புயலார் கடற்பூம் புகலிந் நகர்தானே. 4

4. கயல்மீன்களையொத்த விசாலமான கண்களை யுடைய உமாதேவியாருடன், இடபவாகனத்தின் மேலேறி அயலாரது மனைவாயில்களில் பலி கொண்ட அழகனாகிய சிவபிரான், தமது இயலால் உறையும் இடமாவது, எட்டுத் திசைகளிலுமுள்ள மக்களுக்கும் மழைக்குக் காரணமாகப்

பொருந்திய கடல் சூழ்ந்த அழகிய புகலி நகர் ஆகும். இடபவாகனனாய், அம்மையப்பனாய், பிட்சாடனக் கோலங் கொண்டவன் பதி புகலி என்பதாம்.

தடங்கண்ணி—விசாலமான கண்களையுடைய தேவி.

அயலார்—இங்கு தாருகவனத்து ரிஷிகளைக் குறித்து நின்றது. பலி—பிச்சை.

கடை—வீட்டுவாயில். இயலால்—தமது முழு முதல் தன்மையோடு.

புயல்—மேகம்; மழை முதலிய பொருள்களைத் தரும் சொல், இங்கு மழையைக் குறிக்கது. கடலிலிருந்து மேகமும் மேகத்தால் மழையும் அனைவர்க்கும் பொழிதலால் எண் டிசையோர்க்கும் புயலார் கடல் எனக்கூறியருளினர் என்க.

காதார் கனபொற் குழைதோ டதிலங்கத்
தாதார் மலர்தண் சடையே றமுடித்து
நாதா னுறையும் மிடமா வதுநாளும்
போதார் பொழிற்பூம் புகலிந் நகர்தானே. 5

5. காதுகளில் திரட்சியுடைய பொற்குழையும் தோடும் இலங்க, மகரந்தம் பொருந்திய மலர்களுடன் கூடிய குளிர்ச்சி மிக்கசடையை உயரத்தூக்கிக் கட்டித் தலைவனாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடமாவது எந் நாளும் போதுகள் பொருந்திய பொழில்கள் நிறைந்த அழகிய புகலி நகராகும். அம்மையப்பனாய், சடை முடித்த இறைவன் இடம் புகலி என்பதாம்.

குழை—இறைவரது ஆண் பாகத்துக்குரிய காதின் ஆபரணம்.

தோடு-பெண் பாகத்துக்குரியது. இறைவர் அம்மை யும் அப்பனுமாய் இருக்கும் தன்மையை இவ்விதம் குறித் தருளினர்.

நாதான் — நாதன் என்னும் சொல் எதுகை நோக்கி நீண்டது. நாதன் என்னும் சொல் தலைவன், கடவுள் என்ற பொருள்களைத் தரும்.

வலமார் படைமான் மழுவேந் தியமைந்தன்
கலமார் கடனஞ் சமுதுண் டகருத்தன்
குலமார் பதிகொன் றைகள்பொன் சொரியத்தேன்
புலமார் வயற்பூம் புகலிந் நகர்தானே. 6.

6. வலிமை பொருந்திய சூலப்படை, மான், மழு இவைகளை ஏந்திய வீரனும், மரக்கலங்கள் பொருந்திய கடல் நஞ்சை அமுதென உண்டருளிய தலைவனுமாகிய சிவபிரான் எழுந்தருளிய அழகு பொருந்திய பதி, கொன்றை மரங்கள் பொன் போலும் மலர்களைச் சொரிவதும், அம் மலர்களினின்றும் பெருக்கெடுத்தோடும் தேன் நிறைந்த வயலிடங்கள் நிறைந்த அழகிய புகலி நகராகும்.

வலமார் படை, மான் மழுவேந்திய வீரன், கடல் நஞ்சுண்ட தலைவனது பதி புகலி என்பதாம்.

வலம் — வெற்றி, வலிமை. கலம் — மரக்கலம், பாற் கடலில் மரக்கலம் செல்லும் வாய்ப்பு இல்லை எனினும், கடல் என்பதற்கு ஏற்ப மரக்கலம் என்பது சாதியடை மொழியாம். பின்னர் இவ்வாறு வருமிடங்களிலும் இப்படியே கொள்க.

குலம் — சாதி, அழகு, பிள்ளை, கூட்டம், தேவர் கோயில், அரண்மனை, குடி, மலை என்பன போன்ற பொருள்களைத் தரும். எனவே குலமார் பதி என்பதற்கு அழகு பொருந்திய பதி எனப் பொருள் கொண்டோம். மக்கள் கூட்டம் செறிந்த நகரம் எனக் கொண்டனர் பிறர். அங்ஙனமே தேவர் கோயில் நிறைந்த நகரம் என்றோ, அரண்மனை பொருந்திய நகரம் என்றோ கொள்ளினும் இழுக்காகாது.

கறுத்தான் கனலான் மதின்முன் றையும்வேவச்
செறுத்தான் திகழுங் கடனஞ் சமுதாக

அறுத்தா னயன்றன் சிரமைந் திலுமொன்றைப்
பொறுத்தா னிடம்பூம் புகலிந் நகர்தானே. 7

7. மூன்று மதில்களையும் விழியின் கனலால் வேகும்படிக் கோபித்தவன், கடலில் தோன்றிய நஞ்சினைக் கழுத்தில் அடக்கியவன், பிரமதேவனின் ஐந்து தலைகளில் ஒன்றை அறுத்தவன், அதனைத் தன் கரத்திலே தாங்கியவன், இத்தகைய பெருமானின் உறைவிடம் அழகிய புகலி நகராகும்.

முப்புரமெரித்து, கடல் நஞ்சுண்டு, பிரமன் சிரங் கொய்து தன்னுடைய வீரம் விளங்கும்படி எழுந்தருளியிருக்கும் பதி திருப்புகலி என்பதாம்.

கறுத்தல்—கோபித்தல்; செறுத்தல்—அடக்குதல்.

தொழிலான் மிகுதொண் டர்கள்தோத் திரஞ்சொல்ல
எழிலார் வரையா லன்றரக் கனைசெற்ற
கழலா னுறையும் மிடங்கண் டல்கள்மிண்டிப்
பொழிலான் மவிபூம் புகலிந் நகர்தானே. 8

8. எழுச்சி பொருந்திய திருக்கயிலாய மலையால் (அதனைத் தனது காற்பெருவிரலால் அழுத்தி) அன்று அரக்கனை வலிகுன்றும்படிச் செய்த திருப்பாதங்களையுடைய பெருமான், வழிபடு தொழில்களால் மிக்க தொண்டர்களால் தோத்திரம் சொல்லித் துதிக்கும்படியாக எழுந்தருளி இருக்கும் இடம், தாழைகள் மிகுந்து சோலைகளால் மலியும் அழகிய புகலி நகராகும்.

இராவணனை வலி குன்றச் செய்த பெருமான் தொண்டர்கள் வழிபட வீற்றிருக்கும் பதி திருப்புகலி என்பதாம். எழிலார் வரையால் அன்று அரக்கனைச் செற்ற கழலான், தொழிலான்மிகு தொண்டர்கள் தோத்திரம் சொல்ல உறையும் இடம் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

தொழில்—இங்கு இறைவனை வழிபடும் சரியை, கிரியைகளைக் குறித்தது.

அன்று—இராவணன் கயிலையைப் பெயர்க்க முயன்ற அந்த நாள். எழில்—எழுச்சி, அழகு, வலி, பெருமை என்ற பொருள்களும் உள்ளன. கண்டல்—தாழை.

மாண்டார் சுடலைப் பொடிபூ சிமயானத்
தீண்டா நடமா டியவேந் தல்தன்மேனி
நீண்டா னிருவர்க் கெரியா யரவாரம்
பூண்டான் நகர்பூம் புகலிந் நகர்தானே. 9

9. இறந்தவர்களது சுடலைப் பொடியினை மேலே பூசி மயானத்தை நெருங்கி அங்கு நடனமாடிய தலைவன், பிரம விஷ்ணுக்களுக்கு (அவர்கள் திரு முடியும் அடியும் காணு வண்ணம்) சோதிப் பிழம்பாக நீண்டவன், பாம்புகளைத் தன் மார்பினில் மாலையாக அணிந்தவன், இத்தகைய சிவபிரானது நகரம் அழகிய புகலி நகராகும்.

பொடிபூசி, மயானத்தாடி, மாலயனுக்காக எரியாய் நீண்டு, அரவை ஆரமாகப் பூண்ட பிரானது நகர் புகலி என்பதாம்.

சுடலைப்பொடி பூசி, மயானத்தாடி என்றது அனைவரும் அழிவெய்திடத் தான் மட்டுமே ஒருவனாய் அழிவற்று எஞ்சி நிற்பவன் என்பதை விளக்கியதாம்.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே.

என்ற அப்பரடிகளின் திருவாக்கு இங்கு ஒப்பு நோக்குதற் குரியது.

உடையார் துகில்போர்த் துழல்வார் சமண்கையர்
அடையா தனசொல் லுவரா தர்களோத்தைக்
கிடையா தவன்தன் னகர்நன் மலிபூகம்
புடையார் தருபூம் புகலிந் நகர்தானே. 10

10. உடுக்கத்தக்கதான துகிலைப் போர்வையாகப் போர்த்திக் கொண்டு திரியும் புத்தர்களும், சமணர்களாகிய கீழ்மக்களும் பொருந்தாதனவாகிய வார்த்தைகளைச் சொல்லுவார்கள். கீழ்மககளாகிய அவர்களது நூல்களுக்கு அகப்படாதவனாகிய சிவபிரானது நகரம் நன்மைகள் மலிந்ததும், பாக்கு மரங்கள் பக்கங்களில் சூழ்ந்ததுமான அழகிய புகலி நகராகும்.

சமணர், புத்தர் ஆகியோர் தமது வேதம் என்று சொல்லிக் கொள்ளும் மயக்க நூல்களின் அறிவால் அடைய முடியாதவன் சிவபிரான் என்பது கருத்து. ஓத்து என்ற சொல் பொதுவாக ஓதியே கற்கப்படுகிற நமது வேதங்களையே குறிக்குமாயினும், இங்கு வேத நூல் என்ற பொருளில் புறச் சமயிகளும் தங்கள் பிடகம் போன்ற நூல்களை வேதம் என்று கூறும் காரணத்தால் அவற்றினையும் இச் சொல்லால் குறித்தருளினார் என்று கொள்க.

கிடையாதவன்—கிடைக்காதவன், அகப்படாதவன்.

இரைக்கும் புனல்செஞ் சடைவைத் தவெம்மான்தன்
புரைக்கும் பொழிற்பூம புகலிந் நகர்தன்மேல்
உரைக்குந் தமிழ்ஞான சம்பந் தனெண்மாலை
வரைக்குந் தொழில்வல் லவர்நல் லவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. அலைகள் மோதுதலால் ஒலி செய்கின்ற புனலாகிய கங்கையைத் தமது செஞ்சடையில் வைத்தருளிய எமது பெருமானாகிய சிவபிரானின் உயர்ந்திருக்கும் சோலைகள் நிறைந்த அழகிய புகலிநகரின் மீது (புகலி நகரைப் போற்றி)

தமிழ் ஞானசம்பந்தன் உரைக்கும் இந்த ஞானத்தமிழ் மாலையினைத் தமக்கே உரிமையாக்கிக் கொள்ள வல்லவர் நல்லவர்களாவர்.

இரைக்கும்—ஒலி செய்யும்.

புரைக்கும்—உயர்ந்திருக்கும்.

வரைக்கும் தொழில்—தம்மளவினதாக்கிக் கொள்ளும் முயற்சி அதாவது தாம் இத்தமிழ் மாலையினைப் பயிலும் முயற்சியில் ஈடுபடுதல் தொழிலாம்.

நல்லவர்— நற்குணங்கள் யாவும் தாமே வந்து பொருந்தப் பெறுவர் என்பதாம். தாமஸ, ராஜஸ குணங்கள் அகன்று சத்துவ குணமே பொருந்தப் பெறுவர் என்று கொள்க. "குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக ...." என்று சுந்தரர் பெருமான் ஆனந்த நடராஜ மூர்த்தியைத் தரிசித்த நிகழ்ச்சியைக் கூறும் சேக்கிழார் அருள்வாக்கும் காண்க.

ஒண்தமிழ்—ஒளிமிக்க தமிழ்; இங்கு ஒளி ஞானத்தின் மேல் நின்றது. ஞானத்தமிழ் என்பதாம்.

சிவம்

திருச்சிற்றம்பலம்

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர்—நிறைஉலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

திருச்சிற்றம்பலம்

நம்பியாண்டார் நம்பிகள்—11-ம் திருமுறை

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்புகலி—2

(சீகாழி)

பண்-வியாழக்குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

ஆட லரவசைத்தா னருமாமறை தான் விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையா ளொருபாக மமர்ந்தடியா ரேத்த
ஆடிய எம்மிறையூர் புகலிப் பதியாமே. 1

பதிகப்பொழிப்புரை: *1.* ஆடுகின்ற பாம்பினை அணிந்தவனும், அரிய வேதங்களை விரித்தவனும், கொன்றை மாலையைச் சூடிய சிவந்த சடைமுடியை உடையவனும், சுடுகாடு விரும்பிய பிரானும் ஆகிய சிவபெருமானை இதழ்கள் மலர்ந்த மலர்கள் சூடிய மலைமகளாகிய உமாதேவியார் ஒரு பாகமாக அமர்ந்திருக்க, அடியார்கள் ஏத்தித் துதிக்க ஆடிய அந்த எமது இறைவரது ஊர் புகலிப்பதியாகும்,

அசைத்தல் - கட்டுதல், மறைவிரித்தல் — வேதங்களை உலகிற்கு அருளிச் செய்தல்.

ஏல மலிகுழலா ரிசைபாடி எழுந்தருளாற் சென்று
சோலை மலிசுனையிற் குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோ யண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும் புகலிப் பதியாமே. 2

2. வாசனை மிகுந்த கூந்தலை உடைய பெண்கள் இசை பாடிக்கொண்டே (காலையில்) எழுந்து, திருவருளால் சென்று சோலைகள் மலிந்த சுனையில் நீராடி (இறைவனைத்) துதி செய்ய, ஆலைகளில் உண்டாகின்ற புகையானது உயர்ந்து போய் ஆகாயத்தை மறைத்து மாலைப் பொழுதை உண்டாக்குகின்ற புகலிப்பதியாகும்.

இத்திருப்பாடலில் இரண்டு செய்திகள் கொடுக்கப் பட்டுள்ளன. (1) பெண்கள் காலையில் எழுந்து இறைவரது புகழ்களைப் பாடிக்கொண்டே சென்று சுனைகளில் நீராடி பின்னர் இறைவனைத் துதிப்பர். இது மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் கூறும் மகளிரது செய்கைகளை ஒத்திருக் கின்றது. இரண்டாவதாக சீகாழி மிகவும் வளம் நிறைந்த பதி என்பது கூறப்பட்டுள்ளது. ஆகாயமளவு உயர்ந்து சென்று அதனை மூடி காலை நேரத்தினை மாலை நேரமாகச் செய்யும் புகை மலிந்தது என்றால் அங்குள்ள ஆலைகளின் பெருக்கத்தை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். எனவே பக்தி வளமும் வயல் வளமும் மிகுந்த ஊர் புகலி என்று அருளிச்செய்தவாறு கண்டு கொள்க.

ஏலம்—மகளிர் கூந்தலுக்கு மணமூட்டும் மயிர்ச் சாந்து. அருளாற் சென்று—"அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற மாணிககவாசகரின் வாக்குப்படி அவன் அருளின்றி அவனை வணங்குதல் இயலாதாகையால் அருளால் சென்று என்று கூறியருளினர். ஆலை-கரும்பாலை; வெல்லம் காய்ச்சும் இடம். அண்டர்வானம்— தேவர்கள் வசிக்கின்ற வான உலகம்.

ஆறணி செஞ்சடையா னழகார்புர மூன்றுமன்று வேவ
நீறணி யாகவைத்த நிமிர்புன்சடை யெம்மிறைவன்
பாறணி வெண்டலையிற் பகலேபலி யென்றுவந்து நின்ற
வேறணி கோலத்தினுன் விரும்பும் புகலியதே. 3

3. கங்கையாற்றை அணியாகக்கொண்ட சிவந்த சடையை உடையவனும், அழகிய மூன்று புரங்களும் அன்று வேகும்படிச் செய்து திருநீற்றை அணியாகப் பூசிய புன்சடை கொண்ட எம்மிறைவனும், பருந்துகள் சூழும் வெண்தலையில் பகற்பொழுதிலேயே பிச்சை என்று வந்து நின்ற வேறுபட்ட கோலத்தினை உடையவனுன சிவ பெருமான் விரும்பி எழுந்தருளும் பதி திருப்புகலியாகும்.

அணி — ஆபரணம், அழகு போன்ற பொருள்களில் வந்தது. பாறணி — பாறு என்பது பருந்து எனப் பொருள் படும். மாமிசத்தைப் பருந்துகள் சூழ்வது இயல்பாகலின் உயிரற்ற வெண்டலையையும் பருந்துகள் சூழ்வதாகக் குறிப்பிட்டார்.

பொதுவாக இரவு நேரங்களில் தான் பிச்சை எடுப்போர் பலிக்கு வருதல் வழக்கம். இறைவர் தாருகவனத்தில் பிச்சை எடுக்கப் பிரவேசித்தது பகற்பொழுதாகலின் ‘பகலே பலி என்று வந்துநின்ற’ என்றருளிச் செய்தார்.

வேறணி கோலத்தினன்— இறைவர் தமது இயல்பான கோலத்துடன் பலிக்கு வராது இரவலர் கோலத்தில் (பிக்ஷாடன மூர்த்தி) எழுந்தருளியமையால் ‘வேறணி கோலத்தினன்’ என்றருளிச் செய்தார்.

வெள்ள மதுசடைமேற் கரந்தான் விரவார்புரங்கள் மூன்றும்
கொள்ள எரிமடுத்தான் குறைவின்றி யுறைகோயில்
அள்ளல் விளைகழனி அழகார்விரைத் தாமரைமே லன்னம்
புள்ளினம் வைகியெழும் புகலிப் பதிதானே. 4

4. கங்கையைச் சடையில் மறைத்தவனும், பகைவரது முப்புரங்களையும் தீயானது உண்ணும்படிச் செய்தவனும் நிறைவுடன் உறைகின்ற கோவில், சேறுநிறைந்த விளைநிலங்களில் அழகிய மணமிக்க தாமரைமேல் அன்னமும் பறவைக்கூட்டங்களும் தங்கி எழும் புகலிப்பதியாகும்.

வெள்ளம் —கங்கையைக் குறித்தது; விரவார்—பகைவர்கள்; எரிகொள்ள மடுத்தல் —நெருப்புக்கு இரையாக்குதல் அள்ளல்—சேறு.

சூடு மதிச்சடைமேற் சுரும்பார்மலர்க் கொன்றைதுன்ற நட்டம்
ஆடு மமரர்பிரா னழகாருமை யோடுமுடன்
வேடு படநடந்த விகிர்தன் குணம்பரவித் தொண்டர்
பாட இனிதுறையும் புகலிப் பதியாமே. 5

5. மதிசூடிய சடையின் மேல் வண்டுகள் கூடிய கொன்றை மலர் நெருங்க, நடனம் ஆடிய தேவர்கள் தலைவனும், அழகிய உமாதேவியாரொடும் வேடனாகி நடந்த இறைவனுமாகிய இவ்விறைவனது புகழைத் தொண்டர்கள் புகழ்ந்து பாட இனிதே எழுந்தருளியிருக்கும்பதி திருப்புகலி யாகும்.

வேடுபட நடந்த விகிர்தன்—அருச்சுனனுக்கு பாசுபதம் என்ற அஸ்திரத்தை அருளிச்செய்ய எழுந்தருளிய வேடுவக் கோலத்தைக் குறிக்கின்றது; **விகிர்தன்**— இறைவர்; முன் வந்த இடங்களில் உரைக்கப்பட்டவை காண்க.

மைந்தணி சோலையின்வாய் மதுப்பாய்வரி வண்டினங்கள்
[வந்து
நந்திசை பாடநடம் பயில்கின்ற நம்பனிடம்
அந்திசெய் மந்திரத்தால் அடியார்கள் பரவியெழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப் பதிதானே. 6

6. இளமை மிக்க தேன் பொழிகின்ற சோலைகளில் வண்டினங்கள் வந்து இசைகள் பாட, நடனம் புரிகின்ற நம்பனாகிய சிவபிரானது இடம், மாலை நேரங்களில் ஓத வேண்டிய மந்திரங்களால் துதித்து வணங்கி எழுதலை விரும்பும் மனம் உடைய அடியார்களாகிய நான்மறை யோரது புகலி என்னும் பதியாகும்.

அடியார்கள் பரவியெழ விரும்பும் புகலிப்பதி, புந்தி செய் நான்மறையோர் புகலிப்பதி என இருவகையும் கூட்டிப்பொருள் கொள்ளினும் சிறக்கும். இங்குப் **புந்தி செய்தல்** என்றது மனத்தால் தியானித்தலைக் குறிக்கும்.

நந்திசை—நந்து இசை; வளரும் இசை

அந்தி—மாலை; **அந்திசை மந்திரம்** என்பது ஸந்தியா வந்தனம் என்னும் கிரியையும் கொள்ளலாம். ஸந்தியா வந்தன காலத்தில் ஜபிக்கப்படும் காயத்திரி மந்திரம் சிவ பெருமானையே பொருளாகக் கொண்டது. "அந்தியுள்

மந்திரம் அஞ்செழுத்துமே' என்ற திருஞானசம்பந்தரின் வாக்கையும் இங்கு கருத்தில் கொள்க.

காயத்ரி வல்லபத்வாத் என்ற ஸ்ரீஹரதத்தாசாரியரது வாக்கை உயர் காயத்திரிக்குறு பொருளாகலின் என்று ஸ்ரீ சிவஞான முனிவர் மொழி பெயர்த்தருளியது கொள்க.

மங்கையோர் கூறுகந்த மழுவாளன் வார்சடைமேல் திங்கள்
கங்கை தனைக்கரந்த கறைக்கண்டன் கருதுமிடம்
செங்கயல் வார்கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையி னுற்றொழுவா ரவலம் மறியாரே. 7

7. உமாதேவியாரை ஒரு பக்கமாகக் கொள்ளுதலை விரும்பிய மழு ஆயுதத்தை உடையவனும், நீண்ட சடையின் மேல் சந்திரனையும், கங்கையையும் மறைத்து வைத்த நீலகண்டனுமாகிய சிவபெருமான் விரும்பிய இடமாகிய செங்கயல்மீன்கள் நிறைந்த கழனிகள் நிறைந்த பதியைச் சென்றடைந்து தமது கைகளால் தொழுபவர்கள் துன்பம் என்பதையே அறியமாட்டார்கள்.

அவலம் — துன்பம்

வில்லிய நுண்ணிடையா ளுமையாள் விருப்பனவ னண்ணும்
நல்லிட மென்றறியான் நலியும் விறலரக்கன்
பல்லொடு தோணெரிய விரலூன்றிப் பாடலுமே கைவாள்
ஒல்லை யருள்புரிந்தா னுறையும் புகலியதே. 8

8. ஒளிபொருந்திய நுண்ணிய இடையினை உடைய உமாதேவியாரது விருப்பத்திற்கு உரியவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற நல்ல இடம் இது என்று அறியாதவனாய், அதனைத் தூக்க முற்பட்ட வலியுடைய அரக்கனாகிய இராவணனை அவனது பற்களும் தோள்களும் நெரியும்படி கால்விரலை ஊன்றி (பின்னர் தன் பிழை உணர்ந்து அவன்) ஸாமவேதத்தைப் பாடினதுமே அவனுக்குச் சந்திரகாசம் என்னும் வாளினை உடனே அருள்புரிந்த சிவபிரான் உறையும்பதி புகலியாகும்.

வில்லிய — ஒளிபொருந்திய, விருப்பனவன் — விருப்பத்திற்கு உரியவனுகிய சிவபெருமான்; அறியான் — இந்த இடம் சிவபெருமானின் இடம் என்று அவரது பெருமையை அறியான். அதாவது தான் ஏறகெனவே ஜயித்த மற்றைய தேவர்களைப் போலவே கருதி சிவபெருமான் பெருமையை அறியாமையால் இடர்ப்பட்டான் என்க.

பாடலும் என்று பொதுவாகக் கூறியிருப்பினும் இராவணன் பாடியது ஸாமவேதமே என்பது பிரஸித்தம். நால் வேதங்களுள் பாடலாக இசைக்கப்படுவது ஸாம வேதமே ஆகும். ஸாமகானம் என்பதாம்.

தாதலர் தாமரைமே லயனுந் திருமாலுந் தேடி
ஓதியுங் காண்பரிய உமைகோன் உறையுமிடம்
மாதவி வான்வகுள மலர்ந்தெங்கும் விரைதோய வாய்ந்த
போதலர் சோலைகள்சூழ் புகலிப் பதிதானே. 9

9. மகரந்தம் நிறைந்த தாமரை மலர்மேல் இருக்கும் பிரம்மதேவனும், திருமாலும் தேடியும் ஓதியும் காண்பதற்கு அரியவனுகிய உமாபதி உறையும் இடம், குருக்கத்தி, மகிழ் முதலிய மலர்கள் மலர்ந்து எங்கும் மணம் வீசுதலுற்ற மலர்ச்சோலைகள் சூழ்ந்த புகலிப்பதியாகும்.

மாதவி — குருக்கத்தி; வகுளம் —மகிழம்பூ

விரை — மணம்

வெந்துவர் மேனியினர் விரிகோவண நீத்தார் சொல்லும்
அந்தர ஞானமெல்லா மவையோர் பொருளென்னேல்
வந்தெதி ரும்புரமுன் றெரித்தான் உறைகோயில் வாய்ந்த
புந்தியி னர்பயிலும் புகலிப் பதிதானே. 10

10. கொடிய துவராடை போர்த்திய உடலினையுடைய புத்சர்களும், கோவண ஆடையையும் துறந்தவர்களான சமணர்களும் சொல்லுகின்ற தீமை பயக்கின்ற ஞானத்தை யெல்லாம் ஒரு பொருள் என்று கருதாதீர்கள். தன்முன்

எதிர்த்து நின்ற முப்புரங்களையும் எரித்தவனாகிய சிவபிரான் உறையுங்கோயில் அறிவுள்ளவர்கள் பயிலுகின்ற புகலிப் பதியாகும். (அதனையே பொருளாகக் கருதுங்கள் என்பதாம்.)

அந்தர ஞானம் – அந்தரம் என்ற சொல் அதற்கு உரிய மற்ற பொருள்களுடன் தீமை, இருள் என்ற பொருள்களையும் தரும். பல பதிகங்களில் சமணருடைய பேச்சு மெய்யல்ல என்றும் தீமை பயப்பன என்றும், பிறவிக்கு உட்படுத்துவன என்றும் பிள்ளையார் அருளிச்செய்தமையால் அந்தர ஞானம் என்ற சொல்லுக்குத் தீமை பயக்கும் ஞானம் என்று எம்மால் பொருள் கொள்ளப்பட்டது. 'இருள்' என்று பொருள் கொண்டால் மெய்ஞ்ஞானத்திற்கு எதிராகிய அஞ்ஞானம் என்று பொருள்படும்.

வேதமோர் கீதமுணர் வாணர்தொழு தேத்த மிகுவாசப்
போதனைப் போன்மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை ஞானமிகு சம்பந்தன் தமிழ்மாலை நாவில்
ஓதவல் லாருலகில் உறுநோய் களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. வேதமும் கீதமும் உணர்ந்தவர்களாய் பிரம்மதேவனைப் போன்ற பிராமணர்கள் தொழுது ஏத்தும்படியாக, புகலியில் இருக்கும் தலைவனாகிய சிவபிரானை ஞானம் மிகுந்த சம்பந்தன் சொன்ன தமிழ்மாலையை நாவினால் ஓத வல்லவர்கள் உலகில் உறுவதாகிய துன்பங்களைக் களைவார்கள். (அதாவது துன்பங்களினின்றும் நீங்குவார்கள்.)

வாசப்போதன் — வாசனை நிறைந்த தாமரைப்பூவில் வாசம் செய்யும் பிரம்மதேவன்; **உறுநோய்** — உறுதல் என்பது மிகுதல். பொருந்தல் என்பன போன்ற பொருள்களைத் தரும்; **நோய்** – துன்பம், பிணி, பயம் என்பன போன்ற பொருள்களைத் தரும்.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்புகலி—3

(சீகாழி)

பண் : இந்தளம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

உகலியாழ்கட லோங்குபாருளீர்
அகலியாவினை அல்லல்போயறும்
இகலியார்புர மெய்தவன்னுறை
புகலியாநகர் போற்றிவாழ்மினே. 1

பதிகப்பொழிப்புரை : *1.* பரந்து ஆழ்ந்த கடல் சூழ்ந்து ஓங்கும் நிலவுலகத்து உள்ள மக்களே! பகைவராகிய திரிபுரத்தவரது முப்புரங்களையும் எரியும்படி கணையெய்த வனாகிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் புகலியாகிய திருத்தலத்தைப் போற்றி வாழுங்கள். (அங்ஙனம் போற்றி வாழ்ந்தால்) உங்களது வினைகள் பெருகாமல் ஒழிந்துபோம். துன்பங்களும் உங்களை விட்டு நீங்கிப்போம்.

புகலியாம் நகர் போற்றி வழிபட்டு இன்பவாழ்க்கை எய்துங்கள் என்று உலகத்தவர்க்கு உபதேசித்தமை காண்க. வினைகளும் துன்பங்களும் அகன்று போனால் கிடைப்பது இன்பவாழ்க்கையேயன்றோ? பின்வரும் ஒவ்வொரு பாடலிலும் இம்மாதிரியே உபதேசித்தருளியுள்ளார்.

உகலி — உகளி என்பதன் போலி. உகளுதல் — தாவுதல் — இங்குக் 'கடல்' என்பதற்கேற்ப 'பரந்து' அதாவது 'அகலமாகி' எனப் பொருள் கொள்ளப்பட்டது.

பண்ணியாள்வதோ ரேற்றர்பான்மதிக்
கண்ணியார்கமழ் கொன்றைசேர்முடிப்
புண்ணியன்னுறை யும்புகலியை
நண்ணுமின்னல மானவேண்டிலே. 2

2. அலங்காரங்கள் செய்து ஒரு எருதின் மேல் ஏறி ஊர்பவரும், பிறையாகிய கண்ணியைச் சூடுபவரும், மணங் கமழுகின்ற கொன்றை மாலை சூடிய திருமுடியையுடைய புண்ணியனுமாகிய சிவபிரான் உறையும் திருப்புகலியை, உங்களுக்கு நன்மைகள் ஆனவை அடைய வேண்டுமென விரும்பினால் சென்று தொழுங்கள். 'ஓங்கு பாருளீர்' என்ற முன்பாடலின் விளியை இங்கும் கூட்டிக் கொண்டு, "உலகத்தவரே! நலங்களானவை விரும்பினால் புகலியை நண்ணுமின்" என்று உபதேசித்தருளியது கொள்க.

பண்ணி — எருதுக்கு அலங்காரங்கள் செய்து என்ற பொருள்படக் கூறியதாம். ஆள்வது — இங்கு எருதின் மீது ஏறிச் செலுத்துதலைக் குறித்தது. ஏற்றர் — ஏறு (எருது) உடையவர்.

பான்மதி — பிறைச் சந்திரன். கண்ணி — தலையில் சூடுவதும் காம்புகளையெல்லாம் ஒரு பக்கம் வைத்துக் கட்டுவதுமாகிய ஒருவித பூமாலை. இங்கு இறைவனது தலையில் பிறைச்சந்திரன் அம்மாதிரி பூங்கண்ணி போன்று அமைந்துள்ளான் என்று கூறியருளினார்.

நண்ணுமின் — சென்று அடையுங்கள்; அம்மாதிரி செல்வது தொழுவதற்கேயாம் என்று கொள்க.

வீசுமின்புரை காதன்மேதகு
பாசவல்வினை தீர்த்தபண்பினன்
பூசுநீற்றினன் பூம்புகலியைப்
பேசுமின்பெரி தின்பமாகவே. 3

3. வீசுகின்ற மின்னலை ஒத்த சிறப்புடைய காதினை யுடையவனும், அடியவர்களது பாசமாகிய வல்வினையைத் தீர்த்தருளிய சிறந்த குணமுடையவனும், நீற்றைப் பூசுபவனுமாகிய சிவபிரானது அழகிய புகலித்தலத்தை, உங்களுக்குப் பெரிது இன்பம் ஆக வேண்டினால் துதியுங்கள்,

"பெரிது இன்பம் ஆகப் புகலியைப் பேசுமின்" என்ற தாம். அல்லது 'இன்பம் ஆகப் புகலியைப் பெரிது ஆகப் பேசுமின்" என்று உரைத்தருளியதாகவும் கொள்ளலாம்.

வீசுமின்புரை காதன் -- காதினில் அணிந்த குழையும் தோடும் ஒளி வீசுதலால் அங்ஙனம் கூறியருளியதாகக் கொள்க.

பண்பு — குணம், தன்மை.

பேசுமின் — இங்குத் துதித்துப் பாடுங்கள் என்ற பொருளில் வந்தது.

கடிகொள்கூவிள மத்தம்வைத்தவன்
படிகொள்பாரிடம் பேசும்பான்மையன்
பொடிகொள்மேனியன் பூம்புகலியுள்
அடிகளையடைந் தன்புசெய்யுமே. 4

4. மணம் மிக்க வில்வம், ஊமத்தை மலர் ஆகிய வற்றைத் தலையில் சூடியவனும், பெரிய உருவங்கொண்ட பூதகணங்கள் துதித்துப் பேசும் பெருமையுடையவனும், திருநீறு பூசிய திருமேனியினையுடையவனுமாகிய பூம்புகலி யுள் வீற்றிருக்கும் அடிகளாகிய சிவபிரானைச் சரணடைந்து அவருக்கு அன்பு செய்யுங்கள். (ஓங்கு பாருளீர்' என்ற விளியையும் "இன்பம் ஆக வேண்டிலே" என்ற பயனையும் இங்கும் இம்மாதிரி வரும் பிற இடங்களிலும் கூட்டிக் கொள்க)

கூவிளம் — வில்வம்; மத்தம் – ஊமத்தம் பூ.

படிகொள்பாரிடம் — பெரிய உருவங்கொண்ட அதாவது நீண்டு அகன்ற நிலவுலகம் என்று கொண்டு, நிலவுலகத்து மக்கள் அனைவரும் புகழுகின்ற பெருமையன் என்றும் கொள்ளலாம்.

பாதத்தாரொலி பல்சிலம்பினன்
ஓதத்தார்விட முண்டவன்படைப்
பூதத்தான்புக லிந்நகர்தொழ
ஏதத்தார்க்கிட மில்லையென்பரே. 5

5. திருப்பாதங்களில் ஒலி பொருந்திய பல சிலம்புகளை யுடையவனும், திருப்பாற்கடலில் எழுந்த நஞ்சினை உண்டு அருளியவனும், படையாகப் பூத கணங்களையுடையவனு மாகிய சிவபிரானது திருப்புகலி நகரைத் தொழத் (அங்ஙனம் தொழுவார்க்கு) துன்பத்திற்கு இடமில்லை என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

திருப்புகலியில் சிவபிரானைத் தொழுதால், துன்பம் இல்லை என்றதாம்.

ஏதம் — துன்பம். ஏதத்தார் என்று 'ஆர்' விகுதி இழிவு பற்றி சேர்த்ததாகக் கொள்க.

மறையினொலி மல்குவீணையன்
நிறையினர்நிமிர் புன்சடையனெம்
பொறையினுறை யும்புகலியை
நிறையினற்றொழ நேசமாகுமே. 6

6. வேதங்களையருளியவனும், ஒலி நிறைந்த வீணை யினையுடையவனும், நிறைவுடையவனும், நிமிர் புன்சடை யுடையவனும், பொறுமையே வடிவமான எமது பெருமா னும் ஆகிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருப் புகலியை ஒருமைப்பாட்டுடன் தொழ அன்பு உண்டாகும்.

பொறை — பொறுமை, ஆத்ம குணங்களில் ஒன்று.

நிறை — மகளிர் தமது கணவரையன்றிப் பிறரைக் கருதாத கற்பு போலச் சிவபிரானையன்றிப் பிறதெய்வத் தைத் தொழாத ஒருமைப்பாடு.

நேசம் — அன்பு; சிவபிரானது நேசம் நம்மீது படியும் என்று கொள்க.

கரவிடைமனத் தாரைக்காண்கிலான்
இரவிடைப்பலி கொள்ளுமெம்மிறை
பொருவிடையுயர்த் தானபுகலியைப்
பரவிடப்பயில் பாவம்பாறுமே. 7

7. வஞ்சகம் உடைய மனத்தவர்களைக் காணாதவனும், இரவில் பலி கொள்ளும் எம்மிறைவனும், இடபக்கொடி உயர்த்தவனுமாகிய சிவபிரானது திருப்புகலியைத் துதித்து வணங்கிடப் பாவங்கள் அழியும்.

பொருவிடை — போர் செய்தலையுடைய விடை, எருது.
பாறும் — அழியும்.

அருப்பினார்முலை மங்கைபங்கினன்
விருப்பினனரக் கன்னுரஞ்செகும்
பொருப்பினன்பொழி லார்புகலியூர்
இருப்பினனடி யேத்திவாழ்த்துமே. 8

8. அரும்பினையொத்த முலையினையுடைய உமாதேவியாரைப் பாகத்திலே கொண்டவன், அத்தேவியிடம் விருப்பங் கொண்டவன், இராவணனது வலிமையை அழித்த திருக்கயிலாய மலையையுடையவன், பொழில்கள் நிறைந்த புகலியைத் தனது இருப்பிடமாகக் கொண்டவன், இத்தகைய சிவபிரானது திருவடிகளை வணங்கி வாழ்த்துதலைச் செய்யுங்கள்.

மாலுநான்முகன் றானும்வார்கழல்
சீலமும்முடி தேடநீண்டெரி
போலுமேனியன் பூம்புகலியுள்
பாலதாடிய பண்பனல்லனே. 9

9. திருமாலும் நான்முகனும் திருவடியையும் முடியையும் தேடும்படி நீண்டு உயர்ந்த எரி போன்ற திருமேனியுடைய சிவபிரான், அழகிய புகலி நகரில் பாலபிடேகஞ் செய்யப் பெற்ற பண்பனும், நல்லவனுமாவான்.

கழல் சீலம் — திருவடியின் தன்மை.
எரிபோலும் மேனியன் — தீவண்ணன்.
பாலது ஆடிய – பாலபிடேகம் செய்து கொண்ட.
நல்லன் — நன்மையே செய்பவன், அதாவது சங்கரன்.

புகலியுட் பாலதாடிய என்பதைப் புகலி உட்பாலதாடிய எனப் பிரித்து திருப்புகலியின் உள்பக்கத்திலுள்ள கோயிலில் நடனமாடிய என்றும் பொருள் கொள்ளலாம்.

நின்று துய்ப்பவர் நீசர்தேரர்சொல்
ஒன்றதாகவை யாவுணர்வினுள்
நின்றவன்னிக மும்புகலியைச்
சென்றுகைதொழச் செல்வமாகுமே. 10

10. நின்று உண்ணும் சமணர்களும், நீசர்களாகிய புத்தர்களும் சொல்லும் வார்த்தைகளை ஒரு பொருளாக மதித்து வைக்காத அடியவர்களது உணர்வினுள் நின்றவனாகிய சிவபிரான் விளங்கும் திருப்பதியாகிய திருப்புகலியைச் சென்று கைதொழ (அங்ஙனம் தொழுவார்க்கு) இம்மை மறுமை என்ற இருமைக்குமுரிய செல்வம் உண்டாகும்.

சமணர், பவுத்தர் இவரது பொய்வார்த்தைகளை பொருட்படுத்தாது சிவபெருமானையே தியானிப்போரது அறிவில் சிவபிரான் விளங்குவான் என்பது கருத்து. அங்ஙனம் அறிவால் அறிந்து அவன் இரு தாள் வணங்குவார் இம்மை, மறுமை ஆகிய இருமைக்கும் உரிய செல்வம் பெறுவர் என்பது ஆசாரியரின் உபதேசமாகக் கொள்க.

புல்லமேறிதன் பூம்புகலியை
நல்லஞானசம் பந்தனுவினால்
சொல்லுமாலையீ ரைந்தும் வல்லவர்க்(கு)
இல்லையாம்வினை இருநிலத்துளே. 11

திருச்சிற்றம்பலம்

11. எருதினை ஊர்தியாகவுடைய சிவபிரானது அழகிய திருப்புகலியை, ஞானசம்பந்தன் தனது நல்ல நாவினாற் சொல்லுகின்ற இந்தத் தமிழ் மாலை பத்தும் ஓத வல்லவர்க்கு இந்தப் பெரிய உலகத்தில் வினைகள் இல்லையாகப் போகும். இப்பாடல் பதிகப்பலன் உரைத்தது.

நல்ல நா—நல்லவனாகிய சிவபிரானையே என்றும் பாடுதலால் ஞானசம்பந்தரது நா நல்ல நாவாயிற்று. சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜபம்

திருப்புகலி-4

(சீகாழி)

பண் : இந்தளம்] திருவிராகம் [2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முன்னிய கலைப்பொருளும் மூவுலகின் வாழ்வும்
பன்னிய ஒருத்தர்பழ வூர்வினவின் ஞாலந்
துன்னியிமை யோர்கள்துதி செய்துமுன் வணங்குஞ்
சென்னியர் விருப்புறு திருப்புகலி யாமே. 1

பதிகப் பொழிப்புரை : *1*. பழைமையான கலைகளையும் அவற்றின் பொருள்களையும், மூன்று உலகங்களிலும் வாழ்வோரது வாழ்வையும் உண்டு பண்ணிய தனி முதல்வராகிய சிவபிரானது பழைமையான ஊர் எது என்று கேட்டால், நிலவுலகத்துக்கு வந்து நெருங்கி நின்று ஸ்தோத்திரஞ் செய்து திருமுன் நின்று வணங்குகின்ற தலைகளையுடையவர்களாகிய இமையோர்கள் விரும்புகின்ற திருப்புகலி என்ற பதியாகும்.

"ஞாலந்துன்னி துதிசெய்து முன்வணங்குஞ் சென்னியர் இமையோர்கள் விருப்புறு திருப்புகலியாமே" என்று கூட்டிப் பொருள் கொள்க.

முன்னிய — முந்திய அதாவது தொன்மையான.

கலைப்பொருளும் — கலையும் பொருளும் என் 'உம்'மை சேர்த்துக் கொளக. பன்னிய — பண்ணிய அதாவது உண்டு பண்ணிய; எதுகை நோக்கிப் பன்னிய என்றாயிற்று.

ஒருத்தர்—ஒருவர், அதாவது ஒப்பற்றவர், தனி முதல்வர்.

இமையோர் — தேவர்கள்;

சென்னி — தலை, அதனையுடையவர் சென்னியர்.

வண்டிரை மதிச்சடை மிலைத்தபுனல் சூடிப்
பண்டெரிகை யாடுபர மன்பதிய தென்பர்
புண்டரிக வாசமது வீசமலர் சோலைத்
தெண்டிரை கடற்பொலி திருப்புகலி யாமே. 2

2. வண்டுகள் ஒலி செய்கின்ற, பிறைச்சந்திரன் தங்கும் சடையின் மீது கங்கையினைச் சூடிக் கையில் தீயுடன் பண்டு ஆடும் பரமனது பதியாவது, தாமரை மலர்கள் மணம் வீசுதலும் மலர்ச் சோலைகள் உடையதுமான அலைகள் நிறைந்த கடலில் மிதந்து விளங்கிய சீகாழி என்னும் திருப் புகலியாகும் என்று பெரியோர் கூறுவர்.

பாவணவு சிந்தையவர் பத்தரொடு கூடி
நாவணவும் அந்தணன் விருப்பிடம தென்பர்
பூவணவு சோலையிருள் மாலையெதிர் கூரத்
தேவண விழாவளர் திருப்புகலி யாமே. 3

3. பாடல்கள் சேர்ந்த சித்தத்தையுடையவர்கள் பக்தர்களோடு கூடி அவர்களது நாக்கில் (புகழ் வடிவாக) பொருந்திய சிவபிரானது இருப்பிடம், பூக்கள் பொருந்திய சோலைகளின் இருளால் மாலை நேரம் உண்டாகத் தெய்வ வடிவமான திருவிழாக்கள் மேலும் மேலும் வளர்கின்ற திருப்புகலி என்று கூறுவர். ‘பெரியோர்’ என்ற எழுவாய் இங்கும் இம்மாதிரி வருமிடங்களிலும் சேர்த்துக் கொள்க.

அணவுதல் என்ற சொல் கிட்டுதல், சேர்தல் என்ற பொருள்களைத் தரும்.

சோலைகள் அடர்ந்து இருத்தலால் அவற்றின் இருள் மாலை நேரம் போலக் காட்டும் என்பதாம்.

அந்தணன் — சிவபிரான்; அம்+தண்+அன்—அழகும் தண்மை(கருணை)யும் உடையவன் என்பதாம்.

தேவணவிழா — தெய்வத்தன்மை மிக்க திருவிழா.

மைநவழும் மாமிடறன் மாநடம தாடிக்
கைவளையி னுளொடு கலந்தபதி யென்பர்
செய்பணி பெருத்தெழும் உருத்திரர்கள் கூடித்
தெய்வம திணக்குறு திருப்புகலி யாமே. 4

4. விடத்தின் கறுப்பு நிறம் பரவிய கழுத்தினையுடைய சிவபிரான் மஹாதாண்டவம் செய்து கைகளில் வளையல் களையணிந்த உமா தேவியாருடன் ஒன்று சேர்ந்த பதி, செய்கின்ற திருத்தொண்டுகளுடன் எழுகின்ற உருத்திர கணத்தினர்கள் ஒன்று கூடித் தெய்வத் தன்மையுடன் சேர்க் கையுறுகின்ற திருப்புகலியாம் என்று கூறுவர்.

உருத்திரர்கள் என்பது சிவசாருபம் பெற்ற 11 ருத்திரர் களையும் அவர்களால் படைக்கப்பட்ட பதினொரு கோடி ருத்திரர்களையும் மற்றும் ருத்திர கணங்களையும் குறிக்கும். இந்த உருத்திர கணங்கள் நிலவுலகில் இறைவனைப் பூசித்து அருள் பெறுகின்றனர். நிலவுலக மக்களுக்கு அருள் புரி கின்றனர். திருவிடைமருதூரில் உருத்திரர்கள் சிவபிரானைப் பூசித்தமை கந்தபுராணத்தால் அறியப்படுகின்றது.

உருத்திரர்கள் என்பது மகேசுவரர்கள் எனப்படும் சிவன் அடியார்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். "உருத்திரபல் கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதி யோ பூம்பாவாய்" என்று மகேசுவர பூஜையினைத் திரு ஞானசம்பந்தர் குறிப்பிட்டருளியது காண்க. இப்பாடற் பகுதிக்கு விளக்கமாகச் சேக்கிழார் பெருமான் "அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்" என்றருளிச் செய்ததும் காண்க.

முன்னமிரு மூன்றுசம யங்களவை யாகிப்
பின்னையருள் செய்தபிறை யாளனுறை கோயில்
புன்னைய மலர்ப்பொழில் களக்கினொளி காட்டச்
செந்நெல்வய லார்தரு திருப்புகலி யாமே. 5

5. முன்னம் அறுவகைச் சமயங்களாகிப் பின்னர் அருள் செய்த பிறைச் சந்திரனையணிந்த பெருமான் எழுந்தருளி யிருக்கும் கோயில், புன்னை மலர்கள் நிறைந்த பொழில்கள் உருத்திராட்சத்தின் ஒளியினைக் காட்ட, செந்நெல் வயல்கள் நிறைந்த திருப்புகலியாகும்.

அறுவகைச் சமயம்-சைவத்தின் அறுவகை உட்சமயங்கள் என்றோ, வைதிகச் சமயங்கள் ஆறு என்றோ கொள்ளலாம்' "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய". என்பது சிவஞான சித்தியார்.

அக்கு-உருத்திராட்சமாலை, புன்னை மலர்கள் நெருங்கிப் பொன்னிறம் காட்டுவது பொன்னிறமான அக்கு மாலை களின் ஒளியைக் காட்டுகின்றன என்பதாம். உருத்திராக்கங் களில் பொன்னிறமுள்ளவையும் உண்டு.

வங்கமலி யுங்கடல் விடத்தினை நுகர்ந்த
அங்கணன் அருந்திசெய் திருக்குமிட மென்பர்
கொங்கண வியன்பொழிலின் மாசுபனி மூசத்
தெங்கணவு தேன்மலி திருப்புகலி யாமே. 6

6. மரக்கலங்கள் மிகுந்த கடல் நஞ்சினை உண்டருளிய கருணைக் கண்ணனாகிய சிவபிரான் விருப்பஞ் செய்து எழுந் தருளியிருக்கும் இடம், மணம் சேர்ந்த அகன்ற பொழில் களின் பூந்தாதுக்கள் குளிர்ச்சியினைச் செய்யவும், இனிமை மிகுந்த தென்னை மரங்கள் சேர்ந்த திருப்புகலியாம் என்று கூறுவர்.

அங்கணன்—அழகிய கண்களை உடையவன் என்றும் கொள்க.

அருந்தி—விருப்பம்; கொங்கு—மணம்; வியன் பொழில்- அகன்ற சோலைகளில் வீசும் பூந்தாதுக்களைக் குறித்தது.

மூசுதல்—மொய்த்தல்; தாதுக்களின் நெருக்கத்தால் குளிர்ச்சி உண்டாவதால் மாசு பனிமூச என்றார்.

தெங்கு—தென்னை; தேன்—இனிமை,

நல்குரவும் இன்பமும் நலங்களவை யாகி
வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தனிட மென்பர்
பல்குமடி யார்கள்படி யாரஇசை பாடிச்
செல்வமறை யோருறை திருப்புகலி யாமே 7

7. வறுமையும், இன்பமும், மற்றும் நன்மைகள் எனப் படும் எல்லாமுமாகி உயிர்க்கூட்டத்தின் கொடிய வினைகளைத் தீர்த்தருளுகின்ற வீரனாகிய சிவபிரானது இடம், நிறைந்த அடியார்கள் கோயிற்படிகளில் நெருங்கி இசை பாடி வழி படுதலையுடையதும், செல்வம் நிறைந்த மறையவர்கள் உறைகின்றதுமான திருப்புகலியாம் என்று கூறுவர்.

வறுமையும் இறைவரது அருளே எனக் கொள்ளுதலே அடியார்களது மனப்பான்மை.

இத்திருப்பாடலின் கடைசி இரண்டு வரிகளுக்குப் "படியார இசைபாடிப் பல்கும் அடியார்களாகிய செல்வ மறையோர் உறை திருப்புகலி" என்று கூட்டி உரைத்தலும் பொருந்தும்.

பரப்புறு புகழ்ப்பெருமை யாளன்வரை தன்னால்
அரக்கனை அடர்த்தருளும் அண்ணலிட மென்பர்
நெருக்குறு கடல்திரைகள் முத்தமணி சிந்தச்
செருக்குறு பொழிற்பொலி திருப்புகலி யாமே. 8

8. எல்லாவுலகிலும் பரவுதலையுடைய பெரும்புகழை ஆள்பவனாகிய, திருக்கயிலாய மலையினால் (அதனை விரலால் ஊன்றலால்) அரக்கனை அடர்த்துப் பின்னருளிய அண்ணலது இடம், நெருக்கமாக வீசும் கடல் அலைகள் முத்துக்களையும் மணிகளையும் கரைகளில் சிந்துதலையும், உயர்ந்த பொழில்கள் பொலிதலையும் உடைய திருப்புகலி என்று கூறுவர்.

செருக்கு — இங்கு உயர்ச்சியினைக் குறித்தது.

கோடலொடு கூன்மதி குலாயசடை தன்மேல்
ஆடரவம் வைத்தருளும் அப்பன்இரு வர்க்கும்
நேடஎரி யாகிஇரு பாலும்அடி பேணித்
தேடவுறை யுந்நகர் திருப்புகலி யாமே. 9

9. வெண்மையான காந்தள் மலரோடு வளைந்த பிறைச் சந்திரனும் குலவிய தன்சடையின் மேல் ஆடுகின்ற பாம்பினையும் வைத்தருளும் அனைவர்க்கும் தந்தையாகிய சிவபிரான், பிரம விஷ்ணுக்களாகிய இருவருக்கும் தேடும் படி எரியுருவாகி மேல் கீழ் என்ற இரு பக்கங்களிலும் திரு முடியும் திருவடியும் தேட எழுந்தருளியிருக்கும் திருநகர் திருப்புகலியாகும்.

கற்றமண ருற்றுலவு தேரருரை செய்த
குற்றமொழி கொள்கைய திலாதபெரு மானூர்
பொற்றொடி மடந்தையரும் மைந்தர்புல னைந்துஞ்
செற்றவர் விருப்புறு திருப்புகலி யாமே. 10

10. படித்தவர்களாகிய சமணர்களும், உலவுதலை யுடைய புத்தர்களும் கூறும் குற்றங்களையுடைய வார்த்தை களுக்குக் கொள்கையில்லாத பெருமானுகிய சிவபிரானது ஊர், பொன்வளையல்களையணிந்த மகளிரும், ஆடவர்களும், ஐம்புலத்தாசையையும் துறந்த ஞானியரும் ஆகிய அனை வரும் விரும்புதலையுடைய திருப்புகலியாம்.

சமணர்கள் தமிழ் வளர்த்தார்கள், படித்தார்கள் எனவே கற்ற சமணர்கள் என்றார். கற்றவராயிருந்தும் சிவ பிரானுக்கு ஆளுருமையால் அவர்களது வார்த்தைகள் குற்ற முடையனவாயின. அவ்வார்த்தைகளின் குறிக்கோள் சிவ பிரான் அல்லர் என்பதாம்.

செந்தமிழ் பரப்புறு திருப்புகலி தன்மேல்
அந்தமுத லாகிநடு வாயபெரு மானைப்
பந்தனுரை செய்தமிழ்கள் பத்துமிசை கூர
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. செம்மையான தமிழைப் பரப்புதலையுடைய திருப்புகலி என்னும் தலத்தின் மேல் முதல், நடு, அந்தம் ஆகிய சிவபிரானைத் திருஞானசம்பந்தன் பாடிய தமிழ்மாலைகள் பத்தினையும் இசை பொருந்தும்படி அவை வந்தவாறே பாடித் துதிப்பவர்கள் வானஉலகத்தை ஆளுதலையுடையவர்களாவார்.

பண்டு திருப்புகலியின்கண் இருந்த தமிழ் வளர்ச்சி **செந்தமிழ் பரப்புறு திருப்புகலி என்பதால் புலனாகின்றது.**

திருப்புகலியைப் பாடினாரேனும் அவரது குறிக்கோள் அங்குக் கோயில் கொண்ட இறைவரைப் பாடுதலேயாகையால் **"புகலிதன் மேல்.........பெருமானைப் பந்தனுரை செய் தமிழ் மாலை"** என்றருளிச் செய்தார்.

இறைவரே உலகத்திற்கு ஆதியும், நடுவும், அந்தமும் ஆதலால் **அந்தம் முதலாகி நடுவாய பெருமானை** என்றருளிச் செய்தனர். **"அந்தம் ஆதி என்மனார் புலவர்"** என்ற சிவஞான போதமும் காண்க.

சிவம்

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்புகலி-5

(சீகாழி)

பண் : செவ்வழி] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

விடையதேறி வெறியக் கரவார்த்த விமலனர்
படையதாகப் பரசு தரித்தார்க் கிடமாவது
கொடையிலோவார் குலமும் முயர்ந்தம் மறையோர்கள்தாம்
புடைகொள்வேள்விப் புகையும்பர் உலாவும் புகலியே. 1

பதிகப்பொழிப்புரை: *1.* இடபவாகனத்தின் மீது ஏறி மணம் மிக்க மலரும், அக்கு மாலையும், அரவும் கட்டிய விமலனும்; ஆயுதமாகப் பரசு ஏந்தியவருமாகிய சிவபிரானுக்கு இடமாவது, பிறர்க்கு ஈவதில் எந்நாளும் சலித்தல் இல்லாதவரும், குலத்தில் உயர்ந்தவருமான வேதியர்கள் (தமது இல்லங்களின்) பக்கங்களில் கொண்ட வேள்விகளிலிருந்து எழும் புகை ஆகாயம் சென்று உலாவும் திருப்புகலி என்னும் பதியாகும்.

வெறி — மணம், இங்கு அதனையுடைய மலருக்கு ஆயிற்று.

அக்கு — உருத்திராக்கம், எலும்பு மாலையுமாம். **பரசு** — மழு.

வேள்வி — யாகம். **கொடை** — ஈதல், கொடுத்தல்.

திருப்புகலி மறையோரது கொடைச் சிறப்பும் வேள்விச் சிறப்பும் உணர்த்தியவாறு கண்டு கொள்க.

வேலைதன்னில் மிகுநஞ்சினை உண்டிருள் கண்டனார்
ஞாலமெங்கும் பலிகொண் டுழல்வார் நகராவது
சாலநல்லார் பயிலும் மறைகேட்டுப் பதங்களைச்
சோலைமேவுங் கிளித்தான் சொற்பயிலும் புகலியே. 2

2. பாற்கடலினின்றும் எழுந்த கொடிய நஞ்சினை உண்டு இருண்ட (கரிய நிறமடைந்த) கழுத்தையுடையவரும், உலகமெல்லாம் பிச்சையெடுத்துத் திரிபவருமாகிய சிவபிரானாரது நகராவது, மிகவும் நல்லவர்களாகிய மறையவர்கள் கூறுகின்ற வேதங்களைக் கேட்டுச் சோலைகளில் உள்ள கிளிகள் பதங்களைச் சொல்லப் பயிலும் திருப்புகலியாகும்.

பதம் — வேதங்களை ஓதுவதில் ஒரு முறை.

மிகவும் நல்லவர்களாகிய வேதியர்கள் வேதங்களின் பதபாடத்தை ஓதக் கேட்ட கிளிகள், தாமும் அம்மாதிரியான சொற்களைச் சொல்லிப் பழகும் என்பதாம்.

வண்டுவாழுங் குழல்மங்கை ஓர்கூ றுகந்தார்மதித்
துண்டமேவுஞ் சுடர்த்தொல் சடையார்க் கிடமாவது
கெண்டைபாய மடுவில் லுயர்கேதகை மாதவி
புண்டரீகம் மலர்ப் பொய்கை நிலாவும் புகலியே. 3

3. வண்டுகள் வாழ்கின்ற கூந்தலை உடைய மங்கையான உமாதேவியாரை ஒருபாகமாகத் தமது திருமேனியில் வைத்து மகிழ்ந்தவரும், பிறைச்சந்திரன் பொருந்திய ஒளியுடையதும், தொன்மையானதுமான சடையினை உடையவருமாகிய சிவபிரானுக்கு இடமாவது மடுவில் கெண்டைமீன்கள் பாய்தலை உடைய உயர்ந்த தாழை, குருக்கத்தி முதலியவைகளும் தாமரை மலர் நிறைந்த பொய்கைகளும் விளங்கும் திருப்புகலியாகும்.

மதித்துண்டம் — பிறைச்சந்திரன்: கேதகை — தாழை

திரியும்மூன்று புரமு மெரித்துத் திகழ்வானவர்க்(கு)
அரியபெம்மா னரவக் குழையார்க் கிடமாவது
பெரியமாடத் துயருங் கொடியின் மிடைவால்வெயிற்
புரிவிலாத தடம்பூம் பொழில்சூழ் தண்புகலியே. 4

4. விண்ணில் திரியும் மூன்று புரங்களையும் எரித்து திகழ்ந்தும், வானவர்க்கு அரியவனும் விளங்கும் பெருமானாகிய பாம்பினைக் குண்டலமாக அணிந்த சிவபிரானார்க்கு

இடமாவது, பெரிய மாடங்களில் உயர்ந்து விளங்கும் கொடிகளின் நெருக்கத்தால் வெயிலைச் செய்தலின்றி நிழலைச் செய்தலுடையதும், பெரிய மலர்ச்சோலைகள் சூழ்ந்ததுமான குளிர்ச்சி பொருந்திய திருப்புகலி ஆகும்.

வெயில் புரிவிலாத தண்புகலி, தடம்பூம்பொழில்சூழ் தண்புகலி என ஈரிடத்தும் கூட்டுக.

ஏவிலாருஞ் சிலைப்பார்த் தனுக்கின் னருள்செய்தவர்
நாவினாள்மூக் கரிவித்த நம்பர்க் கிடமாவது
மாவிலாருங் கனிவார் கிடங்கில் விழவாளைபோய்ப்
பூவிலாரும் புனற்பொய்கை யில்வைகும் புகலியே. 5

5. ஏவுதலை உடைய வில்லினையுடைய பார்த்தனுக்கு இனிமையான அருளைச் செய்தவரும், நாமகளது மூக்கினை (வீரபத்திரரால்) அரியச் செய்தவருமான நம்பனார்க்கு இடம் மாமரங்களில் பொருந்திய கனிகள் நீண்ட அகழிகளில் விழுதலால் அங்கு நிறைந்த வாளைமீன்கள் பூக்கள். நிறைந்த நீர்ப்பொய்கைகளில் வசிக்கும் திருப்புகலியாகும்

மாமரங்களினின்றும் பழங்கள் கீழே நீர் அகழிகளில் விழுகின்றன. அதனால் அங்கு வசிக்கும் வாளைமீன்கள் அச்சமடைந்து அருகிலுள்ள பொய்கைகளுக்குச் சென்று வசிக்கின்றன. இதனால் புகலியின் மாமரங்களின் மிகுதியும், நீர்ப்பெருக்கமும் குறிப்பிட்டதாகக் கொள்க.

பார்த்தனுக்குப் பாசுபதம் என்னும் அஸ்திரம் அருளியதை முதல் வரியில் குறிப்பிட்டார். (வேடனும் விசயனும் என்ற நமது தனிநூல் காண்க,) இரண்டாவது வரியில் தக்கயாக சங்காரத்தில் நாமகள் மூக்கினை வீரபத்திரர் அறிந்த செய்தி கூறப்பட்டது.

நம்பர்—உயிர்களின் விருப்பத்திற்கு உரியவர், அதாவது சிவபெருமான்; கிடங்கு — நீர் நிறைந்த அகழி.

தக்கன்வேள்வி தகர்த்த தலைவன் தையலாளொடும்
ஒக்கவேஎம் உரவோ னுறையும் இடமாவது
கொக்குவாழை பலவின் கொழுந்தண் கனிகொன்றைகள்
புக்கவாசப் புன்னை பொன்திறள் காட்டும் புகலியே. 6-7

6—7. தக்ஷனுடைய யாகத்தை அழித்த தலைவனாகிய சிவபிரான், எமது வலிமையிற் சிறந்த பெருமான், உமா தேவியாரோடு உடனாக எழுந்தருளியிருக்கு இடம், மாமரம், பலாமரம், வாழைமரம் முதலிய மரங்களின் கொழுவிய கனிகளையுடையதும் கொன்றை மரங்கள், மணமுள்ள புன்னை மரங்கள் (மலர்களால்) பொன்னின் திரட்சியைக் காட்டுகின்றதுமான திருப்புகலியாகும்.

உரவோன் — வலியவன், அறிவுடையவன்.

கொக்கு — மாமரம்.

புன்னை மரங்கள் பொன்போலப் பூக்குமாகையால் பொன்னின் திரட்சியைக் காட்டும் எனக் கூறியருளினார்.

தொலைவிலாத அரக்கன் உரத்தைத் தொலைவித்தவன்
தலையுந்தோளும் நெரித்த சதுரர்க் கிடமாவது
கலையின் மேவும் மனத்தோர் இரப்போர்க்குக் கரப்பிலார்
பொலியுமந்தண் பொழில் சூழ்ந்தழ காரும்புகலியே. 8

8. தோல்வியில்லாத அரக்கனை இராவணனது வலிமையை ஒழித்து அவனது தலைகளையும், தோள்களையும் நெரித்த சதுரப்பாடு உடையவரான சிவபெருமானுக்கு இடமாவது, கலைகள் பொருந்திய உள்ளத்தை உடைய அந்தணர்களும், இரப்பவர்களுக்கு மறைத்தல் இல்லாது ஈபவர்களும் விளங்குகின்றதும், அழகிய குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்து அதனால் அழகு நிறைகின்றதுமான திருப்புகலியாகும்.

உரம் — மார்பு என்றும் பொருள் கொள்ளலாம்.

சதுரர் — சதுரப்பாடு அதாவது திறமை உள்ளவர். இதேயன்றி உபநிடதங்களில் 'சதுர்த்தம் மன்யந்தே' என்று

கூறுகிறபடி பிரம்ம, விட்டுணு, உருத்திரர் என்னும் மூவர்க்கும் மேலாய முதல்வர், துரிய மூர்த்தி என்றும் பொருள் கொள்ளலாம். கலை — வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய கலைகள். மனத்தோர்—உள்ளத்தை உடைய அந்தணர்கள். கரப்பு — மறைப்பு.

கீண்டுபுக்கார் பறந்தே உயர்ந்தார் கேழலன்னமாய்க்
காண்டுமென்றார் கழல்பணிய நின்றார்க் கிடமாவது
நீண்டநாரை இரையாரல் வாரநிறை செறுவினில்
பூண்டுமிக்கவ் வயல்காட்டு மந்தண் புகலியதே. 9

9. பன்றியும், அன்னமுமாய் காண்போம் என்று கூறியவராய் நிலத்தைப் பிளந்து சென்ற திருமாலும், விண்ணிலே பறந்து உயர்ந்து சென்ற நான்முகனும் (காண இயலாது தம் செருக்கொழிந்து) திருவடிகளைப் பணியும்படி நின்றவராகிய சிவபிரானுக்கு இடமாவது அலகு நீண்ட நாரைக்கு உணவாகிய ஆரல் மீன்கள் ஒழுகி ஓட, நிறைந்த சேறு மிக்க வயல்களையுடைய அழகிய குளிர்ச்சி மிக்க திருப்புகலியாகும் இதனால் திருப்புகலியின் வயல் வளமும், மிகுதியும் கூறப்பட்டது.

தடுக்குடுத்துத் தலையைப் பறிப்பா ரொடுசாக்கியர்
இடுக்கணுய்ப்பா ரிறைஞ்சாத எம்மாற் கிடமாவது
மடுப்படுக்குஞ் சுருதிப்பொருள் வல்லவர் வானுளோர்
அடுத்தடுத்துப் புகுந்தீண்டு மந்தண் புகலியதே. 10

10. தடுக்கினை உடையாக உடுத்து, தலைமயிரை பறிப்பவர்களாகிய சமணர்களோடு, புத்தர்களும் சேர்ந்து மக்களைத் துன்பத்தில் செலுத்துவார்கள். தாமே முதற் கடவுளாகி பிறரை வணங்காத சிவபெருமானுக்கு இடமாவது, வைகறையில் நீர்மடுவில் நீராடும் வேதப்பொருள்களில் வல்லவரான அந்தணர்களும், தேவர்களும் அடுத்தடுத்துப் புகுந்து நெருங்குகின்ற அழகிய குளிர்ச்சி பொருந்திய திருப்புகலியாகும்.

சமணர்களும், புத்தர்களும் இடுக்கண் உய்ப்பார் என்றது அவர்களது கொள்கைகளெல்லாம் மீண்டும் பிறப்புக்கே இடம் ஆதலால் என்க.

பிராமணர்களுடைய கடமைகளில் முக்கியமானது சூரியன் உதிப்பதற்கு முன் நீராடுதல் (ப்ராத ஸ்நானம்) எனவே மடுப்படுக்கும் சுருதிப்பொருள் வல்லவர் என்று கூறியருளினர். மடுப்படுக்கும் — மடுக்களிலே படிந்து நீராடும். மடு—நீர்நிலை.

எய்தவொண்ணு இறைவன் னுறைகின்ற புகலியைக்
கைதவமில்லாக் கவுணியன் ஞான சம்பந்தன்சீர்
செய்தபத்தும் மிவைசெப்ப வல்லார் சிவலோகத்தில்
எய்திநல்ல இமையோர்க ளேத்த இருப்பார்களே. 11

திருச்சிற்றம்பலம்

குறிப்பு : இத்திருப்பதிகத்தில் 7-ம் திருப்பாடல் சிதைந்து போயிற்று.

11. (பாசஞானத்தாலும், பசுஞானத்தாலும்) அடையமுடியாத இறைவன் எழுந்தருளியிருக்கின்ற திருப்புகலியை வஞ்சனை இல்லாத கவுணியர் குலத்துத் திருஞான சம்பந்தன் புகழ் பாடிய பத்துப் பாடல்களாகிய இவைகளைக் கூறித் துதிக்க வல்லவர்கள் சிவலோகத்தை அடைந்து நல்ல தேவர்கள் புகழ்ந்து வழிபட பேரின்பம் நுகர்ந்து இருப்பார்கள். ஸாலோக முத்தியடைவார்கள் என்பதாம்.



உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்புகலி-4

(சீகாழி)

பண் : இந்தளம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

உருவார்ந்த மெல்லியலோர் பாகமுடையீ ரடைவோர்க்குக்
கருவார்ந்த வானுலகங் காட்டிக்கொடுத்தல் கருத்தானீர்
பொருவார்ந்த தெண்கடலொண் சங்கந்திளைக்கும் பூம்புகலித்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. 1

பதிகப் பொழிப்புரை : *1.* திருமேனிப் பொலிவு பொருந்திய உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டிருக்கிறீர், சரண் அடைவார்க்கு அருட்கரு நிறைந்த வானுலகம் காட்டிக் கொடுத்தலைக் கருத்தாக உள்ளீர், (இத்தகைய நீர்) மோதுதல் நிறைந்த தெளிந்த கடலின் ஒளிமிக்க சங்குகள் திளைக்கின்ற அழகிய திருப்புகலியில் உள்ள அருட்செல்வம் பொருந்திய கோயிலையே உமது இருப்பிடமாகக் கொண்டு விளங்குகின்றீர். உரு—திருமேனிப்பொலிவு; மெல்லியல்—மென்மையான தன்மையை உடையவர். பொதுவாகப் பெண்களைக் குறிக்கும் இச்சொல் இங்கு உமாதேவியாரைக் குறித்தது.

திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே — இதில் முதலாவதாகக் குறிப்பிட்ட கோயில் கட்டிடத்தைக் குறித்தது. இரண்டாவதான கோயில் அதனைத் தமது இருப்பிடமாகக் கொண்டதைக் குறித்தது. வருமிடங்களில் எல்லாம் இவ்வாறே கொள்க.

நீரார்ந்த செஞ்சடையீர் நிரையார்கழல்சேர் பாதத்தீர்
ஊரார்ந்த சில்பலியீ ருழைமானுரிதோ லாடையீர்
போரார்ந்த தெண்டிரைசென் றணையுங்கானற் பூம்புகலிச்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 2

2. கங்கைநீர் பொருந்திய சிவந்த சடைமுடியை உடையவரே! ஒழுங்காக அமைந்த வீரக்கழல்கள் சேர்ந்த பாதத்தினை உடையவரே! ஊர்களில் பொருந்திய சில பிச்சை உடையவரே! உழையாகிய மான்தோலை ஆடையாகக் கொண்டவரே! மோதுதலை உடைய கடல் அலைகள் சென்று சேர்கின்ற கானல்களை உடைய அழகிய புகலியின் சிறப்பு பொருந்திய கோயிலையே உமது இருப்பிடமாகச் சேர்ந்தீர்.

உழை — மானின் ஒரு வகை; கானல் — கடற்கரைச் சோலைகள். நிரை — ஒழுங்கு, வரிசை.

அழிமல்கு பூம்புனலு மரவுஞ்சடைமே லடைவெய்த
மொழிமல்கு மாமறையீர் கறையார்கண்டத் தெண்டோளீர்
பொழில்மல்கு வண்டினங்க ளறையுங்கானற் பூம்புகலி
எழில்மல்கு கோயிலே கோயிலாக இருந்தீரே. 3

3. மிகுதி உடைய கங்கையையும், பாம்பையும் சடைமேல் சேரவைத்து, சொற்கள் நிறைந்த சிறந்த வேதங்களை அருளிச் செய்தீர். விஷத்தினைப் பொருந்திய கழுத்தினையும், எட்டுத் தோள்களையும் உடையவர், பொழில்கள் மிகுந்த வண்டினங்கள் ஒலிக்கின்ற, கடற்கரைச் சோலைகள் நிறைந்த திருப்புகலியின் அழகு மிக்க கோயிலையே உமது இருப்பிடமாக இருந்தீர்.

முதல்வரியில் உள்ள அழி என்பது மிகுதி என்ற பொருளில் வந்தது.

கையிலார்ந்த வெண்மழுவொன் றுடையீர்கடிய கரியின்தோல்
மயிலார்ந்த சாயல்மட மங்கைவெருவ மெய்போர்த்தீர்
பயிலார்ந்த வேதியர்கள் பதியாய் விளங்கும் பைம்புகலி
எயிலார்ந்த கோயிலே கோயிலாக இசைந்தீரே. 4

4. திருக்கரத்தில் பொருந்திய ஒரு மழுவாயுதத்தினைக் கொண்டுள்ளீர், கடியதொரு யானையின் தோலை மயிலை

யொத்த சாயல் உடைய உமாதேவியாரும் அஞ்சும்படி உடம்பினில் போர்த்திர்! வேதப்பயிற்சி உடைய அந்தணர் களது ஊராக விளங்குகின்ற பசுமைமிக்க புகலிநகரில் மதில் களைப் பொருந்திய கோயிலையே உமது இருப்பிடமாகக் கொள்ள இசைந்தீர். மிக்க பெருமையுடைய நீர் நில வுலகத்துக் கோயிலை இருப்பிடமாகக் கொண்டீர் என இறைவனது எளிமையையும் குறிப்பிட்டருளினர் எனக் கொள்க.

நாவார்ந்த பாடலீ ராடலரவ மரைக்கார்த்தீர்
பாவார்ந்த பல்பொருளின் பயன்களானீ ரயன்பேணும்
பூவார்ந்த பொய்கைகளும் வயலுஞ்சூழ்ந்த பொழிற்புகலித்
தேவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. 5

5. நாவில் பொருந்திய வேதகீதத்தை உடையவர். ஆடுகின்ற பாம்பினை இடையில் கட்டினவர். பாடல்களில் பொருந்திய பொருள்களின் பயன்களாக ஆனவர். பிரம தேவன் பூசித்த தாமரை மலர்கள் நிறைந்த பொய்கை களும் வயல்களும் சூழ்ந்த திருப்புகலியின் தெய்வத்தன்மை மிக்க கோயிலையே உமது இருப்பிடமாகக் கொண்டு விளங்கினீர்.

மண்ணார்ந்த மண்முழவந் ததும்பமலையான் மகளென்னும்
பெண்ணார்ந்த மெய்மகிழப் பேணியெரிகொண் டாடினீர்
விண்ணார்ந்த மதியமிடை மாடத்தாரும் வியன்புகலிக்
கண்ணார்ந்த கோயிலே கோயிலாகக் கலந்தீரே. 6

6. மத்தளங்கள் ஒலிக்க மலையான்மகள் எனப்படும் உமாதேவியார் ஒரு பாகமாக உடைய திருமேனி பூரிக்க எரியைக் கொண்டு ஆடினீர்! அத்தகைய நீர் வானில் சந்திர மண்டலம் அளவும் ஓங்கிய மாடங்கள் நிறைந்த அகன்ற புகலியில் பொருந்திய கோயிலையே உமது இருப்பிடமாகச் சேர்ந்தீர்.

மெய்மகிழ என்றது ஆடும் போது மகிழ்ச்சியினுல் உடல் பூரித்தலைக் குறித்தது.

மண்ணார்ந்த மண் — இது மத்தளத்தின் மார்ச்சனையைக் குறித்தது. 'மருத்' என்ற மண்ணினால் செய்யப்பட்டது மிருதங்கம் என்று கூறப்படுகிறது.

களிபுல்கு வல்லவுண ரூர்மூன்றெரியக் கணைதொட்டீர்
அளிபுல்கு பூமுடியீ ரமரரேத்த வருள் செய்தீர்
தெளிபுல்கு தேனினமு மலருள்விரைசேர் திண்புகலி
ஒளிபுல்கு கோயிலே கோயிலாக உகந்தீரே. 7

7. களிப்பு பொருந்திய வலிய அசுரரது மூன்று புரங்களும் எரியும்படி ஒரு கணையினைத் தொடுத்தீர்! வண்டுகள் மொய்க்கும் பூக்கள் நிறைந்த முடியை உடையீர்! தேவர்கள் துதிக்க அருள் செய்தீர். தெளிவு மிக்க தேன் வகையும், மலரில் நிறைந்த மணமும் சேர்ந்த திண்மையான புகலி நகரின் ஒளி மிகுந்த கோயிலையே உமது இருப்பிடமாக விரும்பினீர்.

ஒளி — ஞானவொளி, அருள்ஒளி, சுடரொளியுமாம்.

பரந்தோங்கு பல்புகழ்சே ரரக்கர்கோனை வரைக்கீழிட்(டு)
உரந்தோன்றும் பாடல்கேட் டுகவையளித்தீ ருகவாதார்
புரந்தோன்று மும்மதிலு மெரியச்செற்றீர் பூம்புகலி
வரந்தோன்று கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 8

8. உலகம் எங்கும் பரவி ஓங்கிய பெரும்புகழ் சேர்ந்த அரக்கர் தலைவனாகிய இராவணனை மலையின் கீழ் நசுங்கும் படிச்செய்து, பின்னர் அறிவு விளங்கும் அவனது பாடல் கேட்டு உமது மகிழ்ச்சியினை அளித்தீர்! பகைவர்களது முப்புரமாகத் தோன்றிய மூன்று மதில்களையும் எரியும்படி அழித்தீர். அத்தகைய நீர் பூம்புகலியின் மேன்மை மிக்க கோயிலையே உமது இருப்பிடமாகக் கொண்டு மகிழ்ந்தீர்.

உகவை — மகிழ்ச்சி; இங்கு அருளைக் குறித்தது.
உகவாதார் — பகைவர்.

உரம் தோன்றும் பாடல் — ஸாம வேதம். உரம் — அறிவு ஞானம்.

சலந்தாங்கு தாமரைமே லயனுந்தரணி யளந்தானுங்
கலந்தோங்கி வந்திழிந்துங் காணவண்ணங் கனலானீர்
புலந்தாங்கி யைம்புலனுஞ் செற்றார்வாழும் பூம்புகலி
நலந்தாங்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 9

9. நீரினால் தாங்கப்படும் தாமரை மலர் மேலுள்ள பிரமதேவனும், உலகத்தை அளந்த திருமாலும் ஓங்கியும், இழிந்தும் அதாவது வானத்தில் ஓங்கியும், நிலத்தில் இழிந்தும் காணாதவண்ணம் தீப்பிழம்பானீர்! அத்தகைய நீர் மெய்யுணர்வினைப்பெற்று, ஐம்புலத்து ஆசைகளை அழித்த ஞானியர் (சிவனடியார்கள்) வாழ்கின்ற பூம்புகலி நகரின் நன்மை மிக்க கோயிலையே உமது கோயிலாக விரும்பினீர். பிரம விஷ்ணுக்களுக்கு அரிய சிவபிரான் அடியவருக்கெளியவனாக நிலவுலகத்துக் கோயில் கொண்டருளினார் என்பது கருத்து.

நெடிதாய வன்சமணு நிறைவொன்றில்லாச் சாக்கியருங்
கடிதாய கட்டுரையாற் கழறமேலோர் பொருளானீர்
பொடியாரு மேனியினீர் புகலிமறையோர் புரிந்தேத்த
வடிவாருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 10

10. நீண்ட கொடிய சமணர்களும், அறிவு நிறைவு ஒன்றில்லாத புத்தர்களும் கடுமை உடையதாக தமது கட்டி உரைக்கும் போலி உரைகளால் பழித்துப் பேச, நீர், மேலான ஒரு மெய்ப்பொருள் ஆனீர்! திருநீற்றைப் பூசிய மேனியினை உடைய நீர் அந்தணர்கள் இடைவிடாது துதிக்க திருப்புகலியின் அழகு நிறைந்த தோற்றம் கொண்ட கோயிலையேஉமது இடமாகக் கொண்டு மகிழ்ந்தீர்.

ஒப்பரிய பூம்புகலி ஓங்குகோயில் மேயானை
அப்பரிசிற் பதியான அணிகொள்ஞான சம்பந்தன்
செப்பரிய தண்டமிழால் தெரிந்தபாட லிவைவல்லார்
எப்பரிசி லிடர்நீங்கி இமையோருலகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. தனக்கு ஒப்பில்லாத பூம்புகலி நகரின் ஓங்கிய திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானே! அந்த தன்மையில் தலைமை பெற்ற அழகிய ஞானசம்பந்தன் பிறரால் சொல்லுதற்கு அரியவாகிய இனிய தமிழால் ஆராய்ந்து அளித்த பாடல்களாகிய இவைகளை ஓதவல்லவர் எவ்வகையாலும் இடர்கள் நீங்கித் தேவருலகத்தில் இனிதே இருப்பர்.

சிவம்

உ

சிவமயம்

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை —1

திருச்சிற்றம்பலம்

திங்கட் கொழுந்தொடு பொங்கரவு திளைக்கும்
கங்கைப் பேரியாற்றுக் கடுவரற் கலுழியின்
இதழியின் செம்பொன் இருகரை சிதறிப்
புதலெருக்கு மலர்த்தும் புரிபுன் சடையோன்
திருவருள் பெற்ற இருபிறப் பாளன்
முத்தி வேள்வி நான்மறை வளர
ஐவேள் வுயர்த்த அறுதொழி லாளன்
ஏழிசை யாழை எண்டிசை அறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்
காழி நாடன் கவுணியர் தலைவன்
மாழை நோக்கி மலைமகள் புதல்வன்
திருந்திய பாடல் விரும்பினர்க் கல்லது
கடுந்துய ருட்புகக் கைவிளிக் கும்இந்
நெடும்பிற விக்கடல் நீந்துவ தரிதே.

திருச்சிற்றம்பலம்

—நம்பியாண்டார் நம்பிகள் : 11-ம் திருமுறை

திருஞானசம்பந்தரின் பாடல்களை விரும்பி ஓதுபவர்கட் கல்லது மற்றையோருக்கு பிறவிக் கடலை நீந்துவது அரிதாம் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்புகலி—7

(சீகாழி)

பண்-காந்தாரபஞ்சமம்] நாலடி மேல்வைப்பு [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

இயலிசை எனும்பொரு ளின்திறமாம்
புயல்அன மிடறுடைப் புண்ணியனே
கயல்அன வரிநெடுங் கண்ணியொடும்
அயல்உல கடிதொழ அமர்ந்தவனே
கலன்ஆவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலன்நாள்தொறும் இன்புற நிறைமதி அருளினனே. 1

பதிகப் பொழிப்புரை : *1.* இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் மூவகைத் தமிழ் நூல்களில் கூறும் பொருளின் பயனாகிய புண்ணிய மூர்த்தியே! மேகத்தைப் போன்ற கரிய நிறமுடைய கழுத்தினையுடைய புண்ணிய மூர்த்தியே! கயல்மீன் போன்ற அழகிய நீண்ட கண்ணினை யுடைய உமாதேவியாரோடும் எல்லா உலகத்தவரும் உனது திருவடியைத் தொழுமாறு அமர்ந்தவனே! உமக்கு அணிகல மாவது நகு வெண்தலையாம். (அத்தகைய பெருமானான நீரே) இந்த நில உலகத்துள்ளோர் நாள்தோறும் இன்ப மடையும்படி நிறைந்ததான பரம், அபரம் என்னும் இரு வகையான ஞானத்தையும் அடியேனுக்கு அருளிச் செய்தவ ராவீர்.

இயல், இசை என்ற இரண்டையும் கூறவே இனம் பற்றி நாடகத்தையும் கொள்ளுதல் வேண்டும். தமிழ் நூல்களைக் கற்பதின் பயன் சிவபெருமானே தலைவன் என்றுணர்ந்து அவனை வழிபடுதலாம் என்க.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்று திருவள்ளுவரும் அருளியது காண்க. "அலகில் கலையின் பொருட்கெல்லை ஆடுங்கழலே" என்ற சேக்கிழார் வாக்கும் காண்க. (சண்டேசுர நாயனார் புராணம்—15)

வெண்தலை — தாருகாவனத்து இருடியர்கள் செய்த ஆபிசார வேள்வியினின்றும் எழுந்த நகு வெண்தலை. சிவபிரான் மேல் ஏவப்பட்ட இத்தலை நகைத்துக் கொண்டே வர அதனைப் பெருமான் தமது சடையில் வைத்துக்கொண்ட வரலாறு கந்த புராணம் தட்ச காண்டத்தில் விரிவாய்க் காணலாம்.

பொருளின் திறமாம் புண்ணியனே, மிடறுடைப் புண்ணியனே என ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்க.

புண்ணியனே! அமர்ந்தவனே என்பவை விளியாகும். அமர்ந்தவராகிய நீரே அடியேனுக்கு நிறைமதியருளினனே அதாவது அருள் செய்தவராவீர். படர்க்கைச் சொல் முன்னிலைப் பொருள் தந்தது, இடவழுவமைதி.

திருஞானசம்பந்தர் ஞானம் பெற்றதால் உலகம் இன்புற்றதால் நிலன் நாள்தொறும் இன்புற நிறைமதி அருளினனே எனக் கூறினர் என்க.

இனி, அமர்ந்தவன் எவனோ அவனே எனக்கு நிறைமதி அருளினன் எனப் படர்க்கையிலேயே பொருள் கொள்ளினும் பொருந்தும்.

நிலையுறும் இடர்நிலை யாதவண்ணம்
இலையுறு மலர்கள்கொண் டேத்துதும்யாம்
மலையினில் அரிவையை வெருவவன்தோல்
அலைவரு மதகரி உரித்தவனே
இமையோர்கள்நின் தாள்தொழ எழில்திகழ் பொழிற்புகலி
உமையாளொடு மன்னினை உயர்திரு வடியிணையே. 2

2. மலையிடம் அவதரித்த உமாதேவியாரும் அஞ்சும் படி, (தேவர்களை) அலைத்துக் கொண்டு வரும் வலிய தோலையுடைய மதயானையினை உரித்தவனே! தேவர்கள் நினது திருவடிகளைத் தொழும்படி அழகுடன் திகழும் பொழில்கள் சூழ்ந்த திருப்புகலியில் நிலையாக வீற்றிருக்கின்றாய். (அத்தகைய உனது) உயர்ந்த திருவடிகள் இரண்டையும் எமது நிலைத்த துன்பங்கள் நிலையாது தொலையும்படி இலைகளையும் மலர்களையும் கொண்டு நாங்கள் அருச்சித்து வழிபடுவோம்-

மதகரியுரித்தவனே! புகலி மன்னினை, நிலையுறும் இடர் நிலையாத வண்ணம் உயர்திருவடியிணையே இலையுறும் மலர் கொண்டு ஏத்துதும் யாம் எனப் பொருள்கோள் கொள்க.

நிலையுறும் இடர்கள்-எவ்வகையாலும் மக்கள் தாமாகவே நீக்கிக் கொள்ள இயலாமையால் இங்ஙனம் கூறினர்.

மலையினில் அரிவை—மலையினில் அவதரித்த அரிவை என வருவித்து உரைத்துக் கொள்க.

அரிவையை வெருவ—அரிவை வெருவ எனப் பொருள் கொள்க. வேற்றுமை மயக்கம்.

சிவபிரான் யானையினை உரித்தபோது உமாதேவியாரும் அஞ்சினர் என்று திருஞானசமபந்தர் திருப்புகலி-4ல் நான்காம் பதிகத்திலும், திருக்கருகாவூர் பதிகத்திலும் கூறியுள்ளதால் அரிவை வெருவ எனக் கொள்ளுதலே பொருத்தமாம்

"முத்தி லங்குமுறு வல்லுமை அஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே".
(திருக்கருகாவூர் பதிகம்)

இலையுறும் மலர்கள்—இலைகளும் மலர்களும், (பத்திரம்-புஷ்பம்)

பாடினை அருமறை வரன்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்தில்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையேஅடி யார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையேயிட மேவினை தவநெறி அருள்எமக்கே. 3

3. ஒளியுடன் விளங்குவதும் வளருந்தன்மையுடையதுமான வெண்மையான பிறைச் சந்திரன் சேர்ந்த திருமுடியையுடைய நின்மலனே! நீ அரிய வேதங்களைச் சந்த இலக்கணங்களுடன் கூடிய மேலான முறையால் அருளிச் செய்தீர், அரிய தாருக வனத்தில் முனிவர்களும், முனி பத்தினியரும், மற்றும் தேவர்களும் காணும்படி நடனமாடியருளினீர், இயமனைக் காலால் உதைத்தீர். அத்தகைய உம்மையே அடியார்கள் தொழும்படி நீண்ட மதில்கள் சூழ்ந்த திருப்புகலி நகரினையே இருப்பிடமாக விரும்பி அமர்ந்தருளினீர். எமக்குத் தவநெறியினை அருள்புரிவீராக.

காண—முனிவரும், முனிபத்தினியரும், மற்றும் தேவர்களும் காண என வருவித்து உரைக்கப்பட்டது.

நீடு வெண்பிறை—வெண்பிறை நீடுதல் என்றது தக்ஷன் சாபத்தால் தேய்தலையடைந்த சந்திரன் இறைவரைச் சரணடைந்து வளருந்தன்மை பெற்றதால் இங்ஙனம் கூறியதாகக் கொள்க.

நின்மலன்—இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவன். இறைவரது எண்குணங்களில் ஒன்று.

நினையே தொழ என்றதால் அடியார்கள் உன்னைத் தவிர பிற தெய்வங்களைத் தொழமாட்டார்கள் என்று குறிப்பிட்டதாம். "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோமல்லோம்' என்ற அப்பரடிகளின் வாக்குங் காண்க. "மற்றத் தெய்வங்கள் வேதனைப்படும், இறக்கும், பிறக்கும், வினையும்

செய்யும், ஆதலால் இவையிலாதான் அறிந்தருள் செய்வ னன்றே'' என்ற சாத்திரப் பிரமாணமும் காண்க.

''நின்மலனே! நீ பாடினை, ஆடினை, சாடினை, புகலி நகர் இடமாக மேவினை, தவநெறி அருள் எமக்கே'' எனக் கூட்டிப் பொருள் காண்க.

நிழல்திகழ் மழுவினை யானையின்தோல்
அழல்திகழ் மேனியில் அணிந்தவனே
கழல்திகழ் சிலம்பொலி அலம்பநல்ல
முழவொடும் அருநடம் முயற்றினனே
முடிமேன்மதி சூடினை முருகமர் பொழிற்புகலி
அடியாரவர் ஏத்துற அழகொடும் இருந்தவனே. 4

4. ஒளி விளங்குகின்ற மழுப்படையுடையீர், யானையின் தோலை திவண்ணமாய் விளங்குகின்ற உமது திருமேனியில் அணிந்தவரே! வீரக்கழல்களின் ஒலியும், காற்சிலம்புகளின் ஒலியும் கலந்து ஆரவாரிக்க நல்ல முழவங்கள் ஒலிக்க அரிய நடனம் புரிந்தருளிய பெருமானே! திருமுடி மேல் பிறைச் சந்திரனைச் சூடியவரே! (அத்தகைய நீரே) வாசனை பொருந்திய மலர்ச் சோலைகள் சூழ்ந்த திருப்புகலியில் அடியார்கள் ஏத்தித் துதிக்கும்படி அழகுடன் இருந்த வரானீர். (அத்தகைய நீர் எமக்குத் தவநெறி அருள்வீர் என இங்கும் கூட்டிக் கொள்ளலாம்.)

நிழல்—ஒளி; அழல்திகழ்-இதற்கு அக்கினியாக விளங்கு கின்ற எனவும் கொள்ளலாம். அக்கினி இறைவரது திரு மேனியாம்.

கருமையின் ஒளிர்கடல் நஞ்சம்உண்ட
உரிமையின் உலகுயிர் அளித்தநின்றன்
பெருமையை நிலத்தவர் பேசின்அல்லால்
அருமையின் அளப்பரி தாயவனே
அரவேரிடை யாளொடும் அலைகடல் மலிபுகலிப்
பொருள்சேர்தர நாள்தொறும் புவிமிசைப்
பொலிந்தவனே. 5

5. சூரிய நிறத்தினால் ஒளி வீசுகின்றதும் கடலினின்றும் தோன்றியதுமான விடத்தினை உண்ட உரிமையினால் உலகத்திற்கு உயிர் அளித்தருளிய உனது பெருமையினை உலக மக்கள் ஏதோ ஒரு அளவுக்குப் பேசினாற் பேசலாமே ஒழிய அரிய ஆராய்ச்சியினாலும் அளந்தறியப்படாதவராயிருக்கின்றீர். பாம்பு போன்ற இடையினையுடைய உமாதேவியாருடன் அலைகள் பொருந்திய கடல் வளம் மலிந்த திருப்புகலியில் இப்பூவுலகின்கண் நாள்தோறும் பொருள்கள் எல்லாம் சேரும்படி சிறந்து விளங்குகின்றீர்.

கருமையின் ஒளிர் நஞ்சம், கடல் நஞ்சம் என இருவகையும் இயைத்துப் பொருள் கொள்க. இந்த விஷத்தினை இறைவர் உண்ணாதிருப்பரேல் உலகம் அழிந்துபட்டிருக்குமாகையால். அவரே உலகத்தைக் காத்தவர் ஆவர். நஞ்சம் உண்டதால் இறைவருக்கு இந்த உரிமை உண்டானது என்க. பெருமையை .... அளப்பரிதாயனே என்றது உலகத்துமக்கள் தாமறிந்தவாறும் பெரியோர்கள் கூறியவாறும் இறைவரது பெருமையினை ஓரளவு பேசலாமே தவிர முழுமையாக இறைவரது பெருமையினை எவ்வித ஆராய்ச்சித் திறத்தினாலும் அளக்க இயலாது என்பதாம். இதுபற்றிப் பின்னர் மதுரையில் அருளிய வாழ்க அந்தணர் எனத் தொடங்கும் திருப்பாசுரத்தில் விளக்கப்படும்.

பொருள்—பிறவியெடுத்த உயிர்கள் இன்பமாய் வாழ எல்லாப் பொருள்களையும் உலகில் உண்டாக்கியவர் சிவபிரானேயாகையால் புவிமிசைப் பொருள் சேர்தர என்றருளிச் செய்தார். இவ்வாறின்றி அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப் பொருள்கள் எனக் கொண்டனர் பிறர்.

கடல்—இங்குக் கடலாற் பெறும் முத்து, மணி, சங்கு போன்றவற்றைக் குறித்தது.

கொடியிடை, மின்னிடை என்பது போல அரவையும் பெண்களின் இடைக்கு உவமை கூறுதல் உண்டு. துவளுதல்,

ஒளியுடன் இருத்தல், நுண்மையாக இருத்தல் போன்ற தன்மைகளால் பாம்பு பெண்களுடைய இடைக்கு உவமை யாதல் அறிக.

அடையரி மாவொடு வேங்கையின்தோல்
புடைபட அரைமிசைப் புனைந்தவனே
படையுடை நெடுமதிற் பரிசழித்த
விடையுடைக் கொடிமல்கு வேதியனே
விகிர்தாபரமா நின்னை விண்ணவர் தொழப்புகலித்
தகுவாய்மட மாதொடுந் தாள்பணிந் தவர்தமக்கே 6

6. (குகைகளிலே) சென்று அடைகின்ற சிங்கத்தின் தோலொடு, புலியின் தோலையும் உடலின் பக்கங்களில் பொருந்தும்படி இடுப்பில் அணிந்தருளியவரே! அரக்கர்களைப் படையாக உடைய நீண்ட திரிபுரங்களின் வலிமையை அழித்த, இடபத்தைக் கொண்ட கொடியினையுடைய வேதியனாகிய சிவபிரானே! விகிர்தனே! எல்லோருக்கும் மேலானவனே! உன்னை விண்ணுலகத்தவர் தொழ அங்ஙனம் தாள் பணிந்தவர்களாகிய அவர்களுக்குத் திருப்புகலியின் கண் உமாதேவியாரொடும் கூடத் தரிசனம் அளிக்கத்தக்கவராகி வீற்றிருப்பீர்.

இறைவர் உடுத்தியது திருமாலாகிய நரசிங்கத்தின் வலியைக் கெடுத்து அதன் தோலேயாயினும் சிங்கம் என்ற பொதுமைபற்றி அடைதரு அரிமா என்றூர்.

பரிசு—தன்மை, இங்கு வலியினைக் குறித்தது.

விகிர்தன்—வேறுபட்டவன், பரமன்—மேலானவன்.

நின்னைவிண்ணவர் ...... பணிந்தவர் தமக்கே என்பதற்கு விண்ணவர்கள் தொழும்படி புகலியில் அம்பிகையொடும் வீற்றிருந்த உன் தாள்களைத் தொழும் அடியவர்களுக்கும் அருள் புரியத்தக்கவராய் உள்ளீர் என்றும் கொள்ளலாம். இறைவனார் திருவருள் விண்ணவர்க்கு மட்டுமன்றி வழிபடும் அனைவர்க்கும் உண்டு என்பதாம்.

அடியவர் தொழுதெழ அமரரேத்தச்
செடியவல் வினைபல தீர்ப்பவனே
துடியிடை அகலல்குல் தூமொழியைப்
பொடியணி மார்புறப் புல்கினனே
புண்ணியா புனிதா புகரேற்றினை புகலிந்நகர்
நண்ணினாய் கழலேத்திட நண்ணகிலா வினையே. 7

7. உனது அடிகளை வணங்கும் அன்பர்கள் தொழுது எழ, தேவர்கள் துதித்துப் போற்ற அவர்களது துன்பந் தருவனவாகிய கொடிய வினைகளையெல்லாம் தீர்த்தருளும் பெருமானே! உடுக்கை போன்ற இடையையும், அகன்ற அல்குலையும், தூய்மையான மொழிகளையும் உடைய உமா தேவியாரைத் திருநீறு அணிந்த திருமார்புறத் தழுவிய பெருமானே! புண்ணிய மூர்த்தியே! புனிதனே! இடப வாகனனே! திருப்புகலி நகரை இருப்பிடமாக நண்ணினாய். (அத்தகைய உமது) திருவடிகளைத் துதித்து வணங்கிட (அங்ஙனம் வணங்குவாரை) வினைகள் வந்து சேரமாட்டா.

திருப்புகலியில் பெருமான் திருவடிகளை வணங்குவோரை வினைகள் வந்து சேராவாகையால் அவர்கள் முறையே மலபரிபாகம், சத்திநிபாதம் பெற்றுச் சிவப்பேறு அடைவர் என்பது கருத்தாகக் கொள்க.

இரவொடு பகலதாம் எம்மான் உன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்
குரவிரி நறுங்கொன்றை கொண்டணிந்த
அரவிரி சடைமுடி ஆண்டகையே
அனமென்னடை யாளொடும் அதிர்கடல் இலங்கைமன்னை
இனமார்தரு தோளடர்த் திருந்தனை புகலியுளே. 8

8. இரவு பகல் போன்ற எல்லாமாகியிருக்கும் எமது பெருமானாகிய உன்னைத் துதித்தலை ஒருபொழுதும் வழியடியேனாகிய யான் தவற மாட்டேன். குரவமலர்களும், விரிந்த மணமுடைய கொன்றை மலர்களும் அணிந்த பாம்புகள்

சூழ்ந்த சடை முடியினையுடைய வீரனே! அதிரும் கடலை யுடைய இலங்கை மன்னனைக் கூட்டமாகவிருந்த இருபது தோள்களையும் நெரித்த நீ அன்னம் போன்ற மென்மையான நடையினையுடைய அம்பிகையுடன் திருப்புகலியில் கோயில் கொண்டு விளங்கினாய்.

உருகிட உவகைதந் துடலினுள்ளால்
பருகிடும் அமுதன பண்பினனே
பொருகடல் வண்ணனும் பூவுளானும்
பெருகிடும் அருள்எனப் பிறங்கெரியாய்
உயர்ந்தாய்இனி நீஎனை ஒண்மலரடி யிணைக்கீழ்
வயந்தாங் குறநல்கிடு வளர்மதிற் புகலியனே. 9

9. உள்ளமும் உடலும் உருகும்படி ஆனந்தத்தை அளித்து அடியவர்கள் தமது உள்ளத்தால் பருகிடும் அமுதம் போன்ற தன்மையனே! பொருதலையுடைய கடல் (நீல) வண்ணனாகிய திருமாலும், தாமரைப்பூ மேலிருக்கும் பிரம தேவனும் (அடிமுடி காணாதபடி) உனது பெருகுகின்ற அருள் போல மிகுதியான தீப்பிழம்பாய் உயர்ந்தனை. மதில்களை யுடைய திருப்புகலியின்கண் வீற்றிருக்கும் தலைவனே! நீர் இனி என்னை உமது ஒளிமிக்க திருவடியிணைக் கீழ் உறும்படி விரும்பி அருள்புரிவீராக. (திருவடிப் பேறு வேண்டுதல்-)

இறைவரது தரிசனத்தாலும், புகழ்பாடுதலாலும், புகழ் கேட்பதாலும் அடியார்கள் உள்ளம் உருகுகின்றார்கள். அங்ஙனம் உருகுகின்ற அடியார்க்கு சிவானந்தம் என்ற தேனாக விளங்குகின்றான் பரமன். அந்த ஆனந்தத்தேனை—அமுதினை—அடியார்கள் தமது உள்ளத்தால் பருகுகின்றனர் என்பது முதல் இரண்டு வரிகளின் கருத்தாகும்.

இறைவரது அருள் எவ்வளவு பெரியதாகுமோ அவ்வளவு இறைவர் எரியுருவாய், திருமாலும் நான்முகனும் அடி முடி காண இயலா வண்ணம் உயர்ந்தார் என்பது பின்னிரண்டு வரிகளில் போந்த பொருளாம். அடி முடி காணா வண்ணம் என்பது வருவித்து உரைக்கப்பட்டது.

வயந்து—விரும்பி; ஆங்கு உற—திருவடியிணைக்கீழ் உற; மன்—தலைவன், அரசன்.

கையினில் உண்பவர் கணிகைநோன்பர்
செய்வன தவமலாச் செதுமதியார்
பொய்யவர் உரைகளைப் பொருள்எனாத
மெய்யவர் அடிதொழ விரும்பினனே
வியந்தாய்வெள் ளேற்றினை விண்ணவர் தொழுபுகலி
உயர்ந்தார்பெருங் கோயிலுள் ஒருங்குடன் இருந்தவனே.

10. கையினில் உணவு ஏற்று உண்பவர்களாகிய சமணர்களும், போலியான நோன்பினை உடைய பவுத்தர்களும், செய்வன அனைத்தும் தவமல்லாததாகப்பெற்ற சிறுமதியாளர்கள் ஆவர். பொய்யர்களாகிய அவர்களது வார்த்தைகளை உண்மைப் பொருள் என்று கொள்ளாத மெய்யவராகிய சிவநேயர்கள் வந்து திருவடிகளைத் தொழ (அவர்களை) விரும்பியருளியவனே! வெண்மையான எருதினை வியந்து வாகனமாகக் கொண்டனை, விண்ணவர்கள் தொழுகின்ற புகலியின்கண் உயர்ந்து அழகு மிக்க பெருங்கோயிலுள் உமாதேவியுடன் ஒருங்கு இருந்தவரானீர்.

மெய்யவர்—சிவமே மெய்ப்பொருள் என்று அறிந்து கொண்டவர்.

ஒருங்குடன் என்றமையால் உமாதேவியாருடன் என்று வருவித்து உரைக்கப்பட்டது.


புண்ணியர் தொழுதெழு புகலிநகர்
விண்ணவர் அடிதொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம் பந்தன்வாய்மை
பண்ணிய அருந்தமிழ் பத்தும்வல்லார்
நடலையவை இன்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின இன்றித்தாம் எய்துவர் தவநெறியே. 11

திருச்சிற்றம்பலம்

11. புண்ணியர்களாகிய சிவனடியார்கள் தொழுது எழுகின்ற திருப்புகலி நகரில் தேவர்களும் திருவடிகளைத் தொழும்படி விளங்கிய சிவபிரானை, அப்பெருமானைச் சரணாக அடைந்த திருஞானசம்பந்தன் செய்ததான அருமையான தமிழ்ப்பாடல்களாகிய இவை பத்தினையும் ஓதவல்லவர்கள் பிறவித்துன்பங்களானவை எவையும் இல்லாமல், மற்றைய இடர்களும் இல்லாமல் தவநெறியினை அடைவார்கள். அதன் பயனாய்ச் சிவனுலகம் எய்துவர் என்பதாம். முற்பிறவிகளில் புண்ணியஞ் செய்தவர்களே சிவபிரானை வணங்கும் சைவ சமயத்திற்பிறக்கத் தக்கவர்களாதலின் புண்ணியர் தொழுதெழு புகலி என்றார்.

என்ன புண்ணியஞ்செய்தனை நெஞ்சமே எனத்திருவலஞ்சுழிப் பதிகத்தில் ஞானசம்பந்தர் தமது நெஞ்சத்தை வினவும் வகையால் சிவபிரானைப் பணிய புண்ணியஞ் செய்திருத்தல் வேண்டும் என்று அருளிச் செய்துள்ளது காண்க. "சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது, சால உயர் ஞானத்தாலே போழிள மதியினானைப் போற்றுவார் அருள் பெற்றோரே" என்று பிரமாண நூலாகிய சிவஞானசித்தியார் கூறுதலும் இங்குக் கருத்திற்கொள்க.

நடலையவை.................... எய்துவர் தவநெறியே என்ற இவ்விரண்டு அடிகளுக்கும் "அருந்தமிழ் பத்தும் வல்லார் பக்குவராயின் சிவனுலகம் நண்ணுவர், அபக்குவராயின் தவநெறி எய்துவர், அதன் பயனாகச் சிவனுலகமும் நண்ணுவர் என அடிமாற்றி உரைப்பினுமாம்" என்று திருத்தருமையாதீன உரைக் குறிப்பில் பொருள் கொடுக்கப் பட்டுள்ளது.



சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்புகலி-8

(சீகாழி)

பண்-காந்தாரபஞ்சமம்] திருச்சிற்றம்பலம் [3-ம் திருமுறை

கண்ணுத லானும்வெண் ணீற்றினனுங் கழலார்க்கவே
பண்ணிசை பாடநின் றாடினனும் பரஞ்சோதியும்
புண்ணிய நான்மறை யோர்களேத்தும் புகலிந்நகர்ப்
பெண்ணினல் லாளொடும் வீற்றிருந்த பெருமானன்றே. 1

பதிகப் பொழிப்புரை:— *1.* புண்ணியர்களாகிய நான் மறையோர்கள் துதிக்கும் திருப்புகலி நகரில் பெண்ணின் நல்லவளாகிய உமாதேவியோடும் வீற்றிருந்த பெருமானே, நெற்றிக் கண்ணை உடையவனும் வெண்ணீற்றைப் பூசின வனும் திருப்பாதங்களிலே கழல்கள் ஆரவாரம் செய்ய பண்ணுடன் இசைபாட நின்று ஆடியவனும் பரஞ்சோதியும் ஆவான்.

பரஞ்சோதி—எல்லா சோதிகட்கும் மேலான சோதி. சூரியன், சந்திரன், அக்னி, நக்ஷத்திரங்கள், மின்னல் முதலியன எல்லாம் எதனிடமிருந்து ஒளியைப் பெறுகின்றனவோ அந்த சோதியே சிவபெருமான், மேலான சோதி எனப்படும். **'தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி'** என்ற கடோபநிஷத் வாக்கியமும் காண்க. இதன் பொருள் அதனுடைய ஒளியினால் இந்த எல்லாம் பிரகாசிக்கின்றன என்பதாம்.

'அலகில் சோதியன்' என்ற சேக்கிழார் வாக்கும், மெய்ச்சுடருக்கெல்லாம்ஒளி வந்த பூங்கழல்'' என்ற திருவாசகமும் இங்கு ஒப்பு நோக்குதற்குரியது.

புண்ணிய நான்மறையோர்— சிவ புண்ணியமே உரு வெடுத்து வந்தாற் போன்ற நான்கு வேதங்களையும் பயின்ற அந்தணர்கள்.

பெண்ணின் நல்லாள்— உமாதேவியார். "பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து" (சேக்கிழார்—திருக் குறிப்புத் தொண்டர் புராணம்—51)

சாம்பலோ டுந்தழ லாடினுனுஞ் சடையின்மிசைப்
பாம்பினே டும்மதி சூடினுனும் பசுவேறியும்
பூம்படு கல்லிள வாளைபாயும் புகலிந்நகர்க்
காம்பன தோளியொ டும்மிருந்த கடவுளன்றே. 2

2. சாம்பலோடு நெருப்பில் ஆடினவனும், சடையின் மேல் பாம்போடு சந்திரனைச் சூடினவனும், எருது ஏறின வனும் ஆன சிவபெருமான், பூக்கள் நிறைந்த பொய்கையில் இளமையான வாளை மீன்கள் வாழ்கின்ற திருப்புகலி நகரில் மூங்கில் போன்ற தோளினையுடைய உமாதேவியோடு இருந்த கடவுளேயாவார்.

தழல் ஆடுதல்—மஹா சங்கார காலத்தில் உலக மெல்லாம் நெருப்பு மயமாய் இருக்கும். அப்பொழுது அந் நெருப்பின் நடுவில் நின்று இறைவனர் ஆடுவர் என்பதாம்.

பசு—இங்கு எருதினைக் குறித்தது. "பசு ஏறும் எங்கள் பரமன்" என்று வேறொரு பதிகத்திலும் அருளிச்செய்து உள்ளார்.

காம்பன தோளி—மூங்கில் போன்ற தோளினை உடைய தேவியார். வேணுபுஜாம்பிகை என்று வடமொழியில் கூறுவர். காம்பு—மூங்கில்.

கருப்புநல் லார்சிலைக் காமன்வேவக் கடைக்கண்டானும்
மருப்புநல் லானையினீருரி போர்த்த மணாளனும்
பொருப்பன மாமணி மாடமோங் கும்புகலிந்நகர்
விருப்பினல் லாளொடும் வீற்றிருந்த விமலனன்றே. 3

3. நல்ல நீண்ட கரும்பு வில்லை உடைய மன்மதன் எரியும்படி கடைக் கண்ணினால் பார்த்தவனும் அழகிய தந்தத்தையுடைய யானையினின்றும் உரித்த தோலைப்

போர்த்த மணாளனும் ஆகிய சிவபெருமான், மலைகள் போன்ற பெரிய அழகிய மாடங்கள் ஓங்குகின்ற திருப்புகலி நகரில் தம்மீது விருப்பத்தையுடைய உமாதேவியாரோடு வீற்றிருந்த விமலனே யாவர்.

மன்மதன் எரியும்படி கடைக் கண்ணால் பார்த்த வரலாறு கந்த புராணத்தில் உள்ளது. **மணாளர்**— நாயகர் இங்கு சிவபெருமானைக் குறித்தது.

"நித்த மணாளர் நிரம்ப அழகியர்" என்று திருவாசகம் அன்னைப் பத்திலும், "மறைக்காட்டுறையும் மணாளன் தானே" என அப்பரடிகளின் வாக்கிலும் வருதல் காண்க.

அங்கையி லங்கழ லேந்தினனும் அழகாகவே
கங்கையைச் செஞ்சடை சூடினனுங் கடலின்னிடைப்
பொங்கிய நஞ்சமு துண்டவ னும்புகலிந்நகர்
மங்கைநல் லாளொடும் வீற்றிருந்த மணவாளனே. 4

4. உள்ளங்கையில் நெருப்பை ஏந்தினவனும், அழகாக விளங்கும்படி சிவந்த சடையிற் கங்கையைச் சூடினவனும், திருப்பாற்கடலினின்றும் பொங்கிய விடத்தினை அமுதாக உண்டவனும் திருப்புகலி நகரில் மங்கைநல்லாளாகிய உமா தேவியாருடன் வீற்றிருந்த மணவாளனேயாவார்.

அங்கை — அகங்கை (உள்ளங்கை)

மங்கை நல்லாள் — பெண்ணின் நல்லாள் என்பது போன்று அதே பொருளைத் தரும் அழகிய சொற்றொடர்.

மணவாளன் — மணாளன் என்பது போலவே நாயகன், மணமகன், கணவன் என்று பொருள்படும் இச்சொல் இங்குச் சிவபிரானைக் குறித்தது.

சாமநல் வேதனுந் தக்கன்றன் வேள்விதகர்த்தானும்
நாமநு ருயிரஞ் சொல்லிவா னோர்தொழுநாதனும்
பூமல்கு தண்பொழில் மன்னுமந்தண் புகலிந்நகர்க்
கோமள மாதொடும் வீற்றிருந்த குழகனன்றே. 5

5. நல்ல ஸாமவேதம் அருளிச் செய்தவனும், தக்ஷனது வேள்வியை அழித்தவனும், நூறுயிரம் திருநாமங்களைச் சொல்லி வானோர்கள் அருச்சித்து வணங்கும் தலைவனும், மலர்கள் மலிந்த குளிர்ந்த சோலைகள் நிலைபெற்றிருக்கும் திருப்புகலி நகரில் இளமையுடைய உமாதேவியாரோடு எழுந்தருளியிருந்த அழகிய சிவபிரானேயாவார்.

நூறுயிரம் — நூறும் ஆயிரமும் என விரித்து அஷ்டோத்தர சத நாமங்கள், ஸஹஸ்ர நாமங்கள் எனவும் கொள்ளலாம்.

கோமளம் — இளமை, அழகு முதலிய பொருள்களைத் தரும்.

குழகன் — அழகுடையவன், இளமையுடையவன் என்ற பொருள்களைத் தரும்.

இரவிடை யொள்ளெரி ஆடினனும் இமையோர்தொழச்
செருவிடை முப்புரம் தீயெரித்த சிவலோகனும்
பொருவிடை யொன்றுகந் தேறினனும் புகலிந்நகர்
அரவிடை மாதொடும் வீற்றிருந்த அழகனன்றே. 6

6. மஹாசங்காரம் எனப்படும் இரவிடை ஒளிமிக்க எரியில் ஆடினவனும், இமையோர் தொழுது வேண்ட முப்புரங்களையும் தீயினல் எரியச் செய்த சிவலோகநாதனும், பொருதலையுடைய இடபவாகனத்தின் மீது ஏறினவனும், புகலி நகரில் பாம்பினையொத்த இடையினையுடைய உமாதேவியாரொடும் வீறுடன் எழுந்தருளியிருந்த அழகனாகிய சிவபிரானேயாவர்.

மஹாசங்கார காலத்தில் இறைவனுர் எரியாடுதல் பற்றி இரண்டாவது திருப்பாடலின் கீழ் உரைத்தவையும் காண்க. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியயாவும் மஹாசங்கார காலத்தில் அழிந்து படும் ஆகையால் அதனை 'இரவு' என்று கூறியருளினுர்.

சேர்ப்பது திண்சிலை மேவினுனுந் திகழ்பாலன்மேல்
வேர்ப்பது செய்தவெங் கூற்றுதைத்தானும் வேள்விப்புகை
போர்ப்பது செய்தணி மாடமோங்கும் புகலிந்நகர்ப்
பார்ப்பதி யோடுடன் வீற்றிருந்த பரமனன்றே. 7

7. சேருமிடம் திண்மையான திருக்கயிலாய மலையாக விரும்பியிருந்தவனும், இளைஞரான மார்க்கண்டேயர் மீது கோபித்தலைச் செய்து அவரை இழுத்துச் செல்ல வந்த கொடிய கூற்றுவனை உதைத்தவனும், வேள்விப்புகைகள் போர்த்தலைச் செய்து அழகிய மாடங்கள் ஓங்குகின்ற திருப்புகலி நகரில் பார்வதி தேவியாரோடு வீற்றிருந்த பரமன் ஆகிய சிவபிரானேயாவர். பரமன் — எல்லோருக்கும் மேலானவன்.

சேர்ப்பது—சேர்ப்பு+அது சேருமிடமாவது என்பது பொருள். போர்ப்பது — போர்வை போலச் சூழ்ந்து கொள்ளச் செய்வது.

பார்ப்பதி — பர்வதராஜனின் மகளாய் அவதரித்தமையால் அம்பிகை இப்பெயர் பெற்ருள்.

கன்னெடு மால்வரைக் கீழரக்கன் இடர்கண்டானும்
வின்னெடும் போர்விறல் வேடனுகி விசயற்கொரு
பொன்னெடுங் கோல்கொடுத் தானுமந்தண் புகலிந்நகர்
அன்னமன் னந்நடை மங்கையொடும் அமர்ந்தானன்றே.

8. சல்லைப் போலும் திண்மையான நெடிய பெரிய திருக்கயிலாய மலையின் கீழ் அரக்கன் இடருறுமாறு கண்டவனும் (செய்தவனும்) நீண்ட வில்லுடன் போர் செய்யும் வலியுடைய வேடனுகி அருச்சுனனுக்கு ஒரு பொன்மயமான பாசுபதம் என்ற அம்பினைக் கொடுத்தருளியவனும், குளிர்ச்சி மிகுந்த திருப்புகலி நகரில் அன்னம் போன்ற நடையை உடைய உமாதேவியாருடன் அமர்ந்தவனுகிய சிவபிரானேயாவர்.

கோல்—அம்பு, ஈட்டி, வேல் என்பன போன்ற பொருள்களைத் தரும்.

பொன்னிற நான்முகன் பச்சையானென் றிவர்புக்குழித்
தன்னையின் னானெனக் காண்பரிய தழற்சோதியும்
புன்னைபொன் தாதுதிர் மல்குமந்தண் புகலிந்நகர்
மின்னிடை மாதொடும் வீற்றிருந்த விமலனன்றே. 9

9. பொன்னிறமுடைய நான்முகனும், பச்சைநிறமுடைய திருமாலும் ஆகிய இவர்கள் காண்போம் என்று புறப்பட்டுப் போயவழித்தன்னை இன்னாரெனக் காண்பதற்கரியபடி அழற்பிழம்பானவனான பெருமான், புன்னைமரங்கள் பொன்துகளை உதிர்க்கும் அழகிய தண்மையுடைய திருப்புகலி நகரில் மின்னல் இடையை உடைய உமாதேவியாரொடும் வீற்றிருந்த விமலனாகிய சிவபிரானே யாவர்.

புன்னை மரங்கள் பொன்னிறமுடைய பூக்களைப் பூத்தலால் அவற்றின் தாதுக்கள் உதிர்தலைப் **பொன்தாதுதிர்** எனக் கூறியருளினார்.

பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினைப் பேணாததோர்
தொண்டருங் காதல்செய சோதியாய சுடர்சசோதியான்
புண்டரீ கம்மலர் பொய்கைசூழ்நத புகலிந்நகர்
வண்டமர் கோதையொ டுமமிருநத மணவாளனே. 10

10. பிண்டிமரத்தையும் அரசமரத்தையும போற்றுவார்களாகிய சமணர், புத்தர் ஆகியோரது வார்த்தைகளைப் போற்றுதல் செய்யாத ஒப்பற்ற தொண்டர்கள் அன்பு செய்கின்ற சோதியாகிய சுடர்விட்டொளிரும் சோதியனாகிய பெருமான், தாமரைகள் மலரும் பொய்கைகள் சூழ்ந்த திருப்புகலி நகரில் வண்டுகள் சூழ்கின்ற குழலாளாகிய உமாதேவியாரொடும் எழுந்தருளியிருந்த மணவாளனாகிய சிவபிரானேயாவர்.

பிண்டி—அசோகமரம், இதனடியில் தங்கள் கடவுளாகிய **அருகன்** வீற்றிருப்பான் என்று சமணர்கள் இதனைப் போற்றுவர்.

போதி—அரசமரம், இதனடியில் தங்கள் தலைவனுகிய **புத்தன்** ஞானம் அடையப்பெறறுன் என்ற காரணத்தால் புத்தர்கள் இதனைப் போற்றுவர்.

சமணர்களும் புத்தர்களும் கூறும் பேச்சுக்களை ஒரு பொருட்டாக மதிக்காதவர் சிவத்தொண்டர்கள். அவர்கள் அன்பு செய்யும் சோதியன் சிவபெருமான் என்பதாம். அவனே திருப்புகலியில் உமையுடன் இருந்த மணவாளன் என்க.

பூங்கமழ் கோதையோ டும்மிருந்தான் புகலிந்நகர்ப்
பாங்கனை ஞானசம் பந்தன்சொன்ன தமிழ்ப்பத்திவை
ஆங்கமர் வெய்திய ஆதியாக இசைவல்லவர்
ஓங்கம ராவதி யோர்தொழச் செல்வதுமுண்மையே. 11

11. பூக்களின்மணம் வீசுகின்ற கூந்தலையுடைய உமா தேவியுடன் இருந்தவனுகிய திருப்புகலி நகரில் கோயில் கொண்ட சிவபிரானைத் திருஞானசம்பந்தன் தோத்திரம் செய்து சொன்ன தமிழ்மாலைகளாகிய இவை பத்தினையும், அத்திருப்புகலியுள் விருப்பத்துடன் எழுந்தருளிய ஆதியாகவே (சிவமாகவே) கொண்டு இன்னிசையுடன் ஓதித் துதிக்கவல்லவர் ஓங்குதலையுடைய அமராவதி என்ற தேவர் உலகத்து நகருளாரும் தொழும்படி அதற்கும் மேலான சிவனுலகம் செல்வர் என்பது உண்மையேயாகும்.

திருஞானசம்பந்தரது வாக்கினின்றும் பாடலாக வருபவை அம்மை கொடுத்த ஞானமேயாகலின் அவற்றைச் சிவமாகவே கொண்டு வணங்கித் துதிக்க வேண்டும் என்பதாம். **அமராவதியோர் தொழ** என்றதனல் அவர்க்கும் அடைதற்கரிய பதமாம் சிவனுலகம் செல்வர் என்று வருவித்துரைக்கப்பட்டது.

சிவம்

உ
சிவமயம்

திருப்பாடல் முதற்குறிப்பகராதி

திருப்பாடல் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

சிவம்

திருப்புகலி—6

இந்த மாலை பக்கம்—43-ல் பதிகத் தலைப்பு திருப்புகலி—4 என்று இருப்பதைத் திருப்புகலி—6 என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறோம். தவறுக்கு வருந்துகிறோம். —பதிப்பாசிரியர்.

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது

உ

சிவமயம்

சிவனுண்டு பயமில்லை



யத்யத் கர்ம கரோமி

தத்ததகிலம்

சம்போ தவாராதனம்

Elango Achukoodam, 166, R. H. Road, Mylapore, Madras-4.

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளான தேவாரத் திருப்பதிகங்களை பொழிப்புரை, விசேடவுரை, பதிக வரலாறு, தலவரலாறு, புராணவரலாறு முதலிய உரை விசேடங்களுடன் 108 தமிழ் மாலைகளாகப் பிரசுரித்துச் சிவபெருமானின் 108 திருநாமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தமிழ் மாலையாகச் சமர்ப்பிக்கும் இந்த திட்டத்தில் இதுவரை 11 தமிழ் மாலைகள் வெளிவந்துள்ளன.

விலை விவரம் :

முதல் ஆறு மாலைகள் ஒவ்வொன்றும்	...	2-00
ஆறு தமிழ்மாலைகளும் சேர்த்து	...	10-00
7-வது தமிழ் மாலை முதல் ஒவ்வொரு தமிழ் மாலையும்	...	3-00
ஒவ்வொரு ஆறு தமிழ் மாலைகளும்	...	15-00
1 முதல் 108 தமிழ் மாலைகளுக்கும் முன்பண உதவிச் சலுகை விலை	...	158-00

சலுகை விலை முன்பணமாகச் செலுத்தப்பட வேண்டும். ஒரு ஆண்டுக்குள் தவணைகளாகவும் செலுத்தலாம்.

முன்பணம் கிடைத்தவுடன் இதுவரை பிரசுரமான தமிழ் மாலைகள் உடனடியாக அனுப்பப்பட்டு மற்றவை பிரசுரமானதும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

உரையாசிரியர் —பதிப்பாசிரியர்

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை-600033.